விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-எட்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 | வள்ளுவர் ஆண்டு 2033 | வைகாசி 13 | திங்கட்கிழமை (27.05.2002) | தொலைபேசி 3378 | ஒலி 159

28 MAY 2002

நங்கையர் விரும்பும் நவீன டிசைன் தங்க நகைகளுக்கு
நியூ நகுலா ஜுவல்லறி
74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## துறைமுகங்கள் - விமானத்தளங்கள் - அண்டவெளி உட்பட

# இலங்கையின் பாதுகாப்புக்கு அமெரிக்காவே முழுப் பொறுப்பு

### பாதுகாப்பு ஒப்பந்தம் யூலைமாதம் கைச்சாத்து

(பாதுகாப்புச் செய்தியாளர்)

**அமெரிக்கா தனது இராணுவ உதவியை இலங்கைக்கு வழங்கும் வகையில் "பாதுகாப்பு ஒப்பந்தம்" ஒன்றை இரண்டு நாடுகளும் செய்துகொள்ளவுள்ளன.**

**இலங்கையின் துறைமுகங்கள், விமானத்தளங்கள் வான்பரப்பு ஆகியவற்றை பயன்படுத்தும் வாய்ப்பு அமெரிக்காவுக்கு கிடைக்க வழிசெய்யும் இந்த ஒப்பந்தம் யூலைமாதத்தில் கைச்சாத்திடப்படவிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.**

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தான பின் இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் பாதுகாப்பு உறவுகள் அண்மைக்காலமாக பலப்படுத்தப்பட்டுவருகிறது.

அமெரிக்க இராணுவ வல்லாதிக்கம் இலங்கையில் காலடி பதிப்பதற்கு முன்னோடியாக அமெரிக்காவின் பிரதி வெளிவிவகார அமைச்சர் கிறிஸ்ரீனா றொக்கா அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த போது பிரதமர் ரணில்

(08ம் பக்கம் பார்க்க)

## படகு கவிழ்ந்ததில் 4பேரைக் காணவில்லை

(கொழும்பு)

இந்தியாவில் இருந்த படகுகள் மூலம் தாயகம் திரும்பிக் கொண்டிருந்த இலங்கையர்கள் நால்வர் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த புதன்கிழமை தலைமன்னாருக்கும் தனுஷ்கோடிக்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் படகு கவிழ்ந்ததாகவும் இந்தச் சம்பவத்தில் காணாமற்போன நான்குபேரும் இறந்திருக்கலாமென அஞ்சப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக முள்ளியவளையைச் சேர்ந்த குமாரசாமி சந்திரகுமார் மன்னார் உதவி அரசாங்க அதிபருக்கு அளித்த வாக்கு மூலத்தில் கூறியதாவது:

(08ம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க - இலங்கை ஒப்பந்தம் வழமையான நட்புறவோடு கூடியது

### பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே இடம்பெறவுள்ள பாதுகாப்பு ஒப்பந்தத்தை ஒரு ஒப்பந்தமாகக் கருத முடியாது.

அமெரிக்கா தனது நட்புறவு நாடுகளுடன் சேவையைப் பரிமாறிக் கொள்ளும் ஓர் வழமையான நடவடிக்கையே இதுவாகும் எனபாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே ஜுலை மாதம் அளவில் கைச்சாத்தகவுள்ள பாதுகாப்பு ஒப்பந்தம் சம்பந்தமாக கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா இலங்கை அரசுடன் செய்து கொள்ள இருக்கின்ற பாதுகாப்பு ஒப்பந்தமானது இரு நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர உதவியாகும். இது தொடர்பாக எந்தப் பேச்சவார்த்தையின் போதும் பிரஸ்தாபிக்கப்படவில்லை.

அமெரிக்கா மட்டும் இலங்கைக்கு இராணுவ உதவிகளை வழங்கவில்லை.

(08ம் பக்கம் பார்க்க)

## நோர்வே அரசினால்

# அரசுக்கும் புலிகளுக்கும் வினாக்கோத்து அனுப்பிவைப்பு

(கொழும்பு)

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் தாய்லாந்தில் இடம்பெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னிட்டு நோர்வே அரசு வினாக்கொத்து ஒன்றைத்தயாரித்து இரு தரப்பினருக்கும் அனுப்பிவைத்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தாய்லாந்தில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்து தயாரிக்கப்பட்டுள்ள இவ் வினாக்கொத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரங்கள் வருமாறு:

✸ தாய்லாந்தில் நடைபெறவுள்ள சமாதானப்பேச்சுவார்த்தைக்கான கால அளவு:

(08ம் பக்கம் பார்க்க)

## பிரதமர் பயணம் செய்த

## ஆயுதக் குழுவால் உழவு இயந்திரம்

### பிரதமர் பயணம் செய்த

# விமானம் தரையிறக்கம் விசாரணைக்கு உத்தரவு!

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா லண்டனுக்குச் சென்ற விமானம் இயந்திரக்கோளாறு காரணமாக டுபாயில் தரையிறக்கப்பட்டது தொடர்பான விசாரணைகளை இலங்கை விமான அதிகாரசபை தற்போது மேற்கொண்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகளுக்கு ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஸ்ரீலங்கா ''எயார்லைன்னின் எயார் பஸ் ஏ 340'' விமானத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்றுமுன்தினம் அதிகாலை லண்டனுக்குப் புறப்பட்டிருந்தார். (08ம் பக்கம் பார்க்க)

# உழவு இயந்திரம் கடத்தப்பட்டது

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை வாகனேரிப் பகுதியில் உழவு இயந்திரம் ஒன்று இனந்தெரியாத ஆயுதக்குழு ஒன்றினால் அபகரிக்கப்பட்டுள்ளது.

வாகனேரி பகுதி வயல் நிலங்களில் இருந்து விவசாய உபகரணங்களை ஏற்றிக்கொண்டு ஓட்டமாவடி நோக்கிச் சென்று கொண்டிருந்த உழவு இயந்திரமே இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பாக வாழைச்சேனைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.(த)

தரப்பினருக்கும் அனுப்பிவைத்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கால அளவு: (08ம் பக்கம் பார்க்க)

# மலகூடக் குழியில் இருந்து மனித எலும்புக்கூடு மீட்பு!

### கொழும்புத்துறையில் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

அரியாலை கொழும்புத்துறைப் பகுதியில் பயன்படுத்தப்படாத மலசல கூடத்திலிருந்து மனித எலும்புக்கூடு ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

படைத்தரப்பைச் சேர்ந்த ஒருவரே இவ் எலும்புக்கூட்டை கண்டெடுத்துள்ளார். ஆண் ஒருவருடைய எலும்புக் கூடு இது என்றும் சுமார் 4அடி 8 அங்குல உயரம் உடையது என்றும் 18வயது முதல் 25வயதிற்கு இடைப்பட்டவருடைய எலும்புக் கூடாக இது இருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீல நிறம் உடைய நீளக் காற்சட்டை அணிந்தவாறும் வெள்ளை நிற (08ம் பக்கம் பார்க்க)

### அரசு-புலிகள் சமாதானப் பேச்சுக்கு ஆலோசனை வழங்க

# சர்வதேச சட்டவல்லுநர் குழுவை நோர்வே அரசு நியமித்துள்ளது!

(கொழும்பு)

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே தாய்லாந்தில் இடம்பெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக அரசியல் சட்டம் குறித்து நுட்பமான அறிவு கொண்ட ''சர்வதேச சட்ட வல்லுநனர் குழு'' ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து எழும் சட்டச்சிக்கல்கள் குறித்து ஆலோசனைகளை வழங்கவே இக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

நோர்வே அரசின் மேற்பார்வையின் கீழ் இயங்கவுள்ள சட்ட நிபுணர்கள் அடங்கிய இக் குழுவில் சுவிர்சலாந்தை சேர்ந்த முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரும், கனடாவைச் சேர்ந்த இரு சட்ட வல்லுநர்களும் இடம்பெற்றுள்ளனர். இவர்களுடன் அவுஸ்திரேலியா, நெதர்லாந்து, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த சட்டவல்லுநர்களும் இடம் பெறுவுள்ளனர் என்று தெரிவிக்கப் படுகிறது. (08ம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதியுடன் இன்று சந்திப்பு

(கொழும்பு)

தற்போது அமுலில் இருந்து வரும்போர்நிறுத்த உடன்படிக்கை குறித்து நோர்வே தூதுக்குழு இன்று ஜனாதிபதியை சந்தித்து பேசவுள்ளது.

இச் சந்திப்பின் போது நோர்வே தூதுக்குழுவின் சார்பில் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் மற்றும் நோர்வே வெளியுறவுத்துறையின் ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர். (ந.5)

# நோர்வே பிரதிநிதி மட்டு. வருவார்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெறும் யுத்தநிறுத்த மீறல்களைக் கண்காணிக்கும் பொருட்டு நோர்வே நாட்டைச் சேர்ந்த பிரதிநிதியான திருமதி பீற்றர் நாளை மறுதினம் புதன்கிழமை இலங்கை வரவுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்கனவே யுத்தநிறுத்தத்தைக் கண்காணிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் இரண்டு வெளிநாட்டு கண்காணிப்பாளர்களுடன் இவரும் இணைந்து செயற்படவுள்ளார். (த)

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பருத்தித்துறை வீதியில் இருந்து 200 யார் தூரத்தில் போக்குவரத்து வசதியும் மின்சாரம், தனிக்கிணறு, மலசலகூடம் போன்ற வசதியும் கூடிய 1½ பரப்புக்காணி 4 அறை கோலுக்குரிய அத்திவாரத்துடன் கல்வியங்காட்டில் விற்பனைக்குண்டு

தொடர்பு: க. அம்பிகைபாகர் 38 சிவன்கோவில் வீதி, திருநெல்வேலி தெற்கு திருநெல்வேலி.

(5340)

## புதிய நிர்வாகிகள்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இதன் பிரகாரம் ஒன்றியத்தின் புதிய தலைவராக கே. பரணீதரனும், செயலாளராக எம். சிவகுமாரும், பொருளாளராக எஸ். பிரதீபனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (க-77)

## யாழ்செயலக முக்கிய கூட்டங்கள்
# அரசசார்பற்ற பிரதிநிதிகளுக்கு அழைப்பு அனுப்பப்படுவதில்லையாம்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணத்திற்கு உத்தியோக விஜயங்களைமேற்கொண்டுவருகின்ற அமைச்சர்கள் மற்றும் வெளிநாட்டுத் தூதுவர்கள் யாழ் அரசசெயலகத்தில் நடைபெறும் கூட்டங்களில் பங்குகொள்கின்ற வேளைகளில் யாழ்ப்பாண உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்குப் பங்குகொள்ள அழைப்பு அனுப்பப்படுவதில்லை என இணையம் பலத்த அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளது.

இதன் மூலம் இங்குவருகின்ற அமைச்சர்கள் மற்றும் வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு குடாநாட்டுமக்கள் எதிர்நோக்கிவருகின்ற பிரச்சினைகள் மற்றும்தேவைகள் பற்றிய தகவல்கள் மக்கள் தரப்பினால்எடுத்துக்கூறப்படுவதில்லைஎன யாழ்மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விதம் அரசசெயலகத்தில் நடைபெறும் கூட்டங்களில் பொதுமக்கள்படும் அவஸ்தைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி அதிகாரிகள் தரப்பில் எடுத்துக்கூறப்படுவதில்லை எனவும் தெரிய வந்துள்ளதாக அறியப்படுகின்றது.

(77)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஊடகவியலாளர் சங்கத்தின் அவசர பொதுக்கூட்டம் ஒன்று நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9·30மணிக்கு பலாலி வீதியிலுள்ள மேற்படி சங்கத்தின் அலுவலகத்தில் சங்கத்தலைவர் வே.தவச்செல்வன் தலைமையில்நடைபெறவுள்ளது. (த43)

## கடந்த 10 வருடத்தின் பின்னர்
# அம்பாறை பாடசாலையிலிருந்து பொலிஸார் முற்றாக வெளியேற்றம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்ட வீரமுனை இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்தில் முகாமிட்டுள்ள பொலிஸார் வெளியேறியுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த 10 வருடங்களாக அப் பாடசாலையில் முகாமிட்டிருந்தபொலிஸார் அரசு- புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தையடுத்தே வெளியேறியுள்ளனர் என பொலிஸ் தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

1990 ஆம் ஆண்டு வீரமுனையில் இடம் பெற்ற இனவன் முறைகளைத் தொடர்ந்து.இப் பாடசாலைகளில் தற்காலிக முகாம் அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதே வேளை யாழ்: மாவட்டப் பாடசாலைகளில் முகாமிட்டுள்ள படையினரை வெளியேறக் கோரி வடமராட்சி பாடசாலை மாணவர் சமூகம் கடந்த வியாழக்கிழமைஎதிர்ப்புபோராட்டங்களை நடத்தியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (க-08)

# சமாதான முயற்சியை குழப்ப முனைப்பு

(கொழும்பு)

போரின் மூலம்இலாபம்ஈட்டும் தீயசக்திகள் சிலபிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினால் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சியை குழப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன.

மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற அகிலஇலங்கை உப-தபாலதிபர்கள் சங்க 40வது வருடாந்த பொதுக்கூட்டத்தின் போது மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அங்குமேலும் தெரிவிக்கப்பட்டகருத்துக்கள் பின்வருமாறு.

தமிழீழ விடுதலைப்புலிகளின் மீதுஇலங்கைஅரசுவிதித்துள்ள தடையை உடன்நீக்க வேண்டும் என்பதுடன் காலவரையறையற்று சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ்கைதிகள் விடுவிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

கடந்த 20ம்திகதி நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சகலதேர்தல் முடிவுகளும் நாட்டுமக்களின் சமாதான விருப்பத்தையே வெளிப்படுத்தி நிற்கிறது எனவும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

(க-8)

# குடிநீர்பிரச்சினையை தீர்க்க வேலணையில் புதியதிட்டம்

(தென்மராட்சி)

ஊர்காவற்றுறை, வேலணைப் பகுதிகளில் நீண்டகாலமாக நிலவிவருகின்ற குடிநீர்பிரச்சினைக்கு தீர்வு காணும்பொருட்டு ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் ஜேர்மனியில் உள்ள ஏ.எவ் அபிவிருத்திவங்கியின் நிதியுதவியுடன் மழைநீரைச் சேகரித்து குடிநீரைப் பெறும் திட்டந்தினை அமுல் படுத்தவுள்ளது.

மாதிரி பரிசோதனை திட்டமாக அமுல் செய்யப்படவுள்ள இத்திட்டத்தின் சாத்தியக் கூற்று அறிக்கைகள் யாவும் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் உயர் மட்ட குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுவிட்டதாகவும் தெரிய வந்துள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ளஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் ஊர்காவற்றுறையில் 100 வீடுகளையும், வேலணையில் 50 வீடுகளையும் நிர்மாணித்துள்ளது.

இவ் இரு திட்டங்களின் பயனாளிகளாகவுள்ள குடும்பங்கள் எதிர் நோக்குகின்ற குடிநீர்ப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதே இத் திட்டத்தின் அடிப்படை நோக்கம் என நிறுவனத்தின் உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

மழை நீரைச் சேகரிப்பதற்கான நீர்த் தாங்கிகளை நிர்மாணிக்கும் பணிகள் எதிர் வரும் ஜூலை மாதத்தில் ஆரம்பமாகும் எனவும் தெரியவந்துள்ளது. (க-77)

## தென்மராட்சியில்
# யுத்த நடவடிக்கையால் அதிக கிணறுகள் சேதம்

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் 2000ம் ஆண்டு இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளின் போது மொத்தமாக 4ஆயிரத்து 119கிணறுகள் சேதமடைந்த நிலையில் இருப்பதாகபிரதேசசெயலகத்தின் திட்டமிடல்பகுதியினரால் திரட்டப்பட்ட புள்ளி விபரங்கள்மூலம் தெரியவந்துள்ளது

இத்தொகையில் 3ஆயிரத்து 825 தனியார் கிணறுகளும் 294பொதுக்கிணறுகளும் உள்ளடங்கியுள்ளன.

அதேசமயம் இந்தயுத்தநடவடிக்கையின் போது4ஆயிரத்து543 தனியார் மலசலகூடங்களும் 161பொது மலசலகூடங்களும் சேதமடைந்துள்ளன எனவும் தெரியவந்துள்ளது.

(க-77)

# பனைமரம் தறிப்பது சட்டவிரோதமான குற்றம்

### ப. அ. ச. தலைவர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் சட்டவிரோதமாக பனைமரம் தறிப்பவர்கள் மீது உரிய சட்டநடவடிக்கை எடுக்கப்படுமென பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பொ. சிவபாதம் அறிவித்துள்ளார்.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் படையினர் கண்டபாட்டில் பனைமரங்களைத் தறித்து வருகின்றனர்.

இதனால் பனைவளம் அழிந்து போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு பனைமரம் தறிப்பது தொடர்பான தகவல்களை பொதுமக்கள் எழுத்து மூலமோ அல்லது 021- 2034 என்ற தொலைபேசி இலக்கம் மூலமோ தெரியப்படுத்துமாறும் இது குறித்து உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பனைமரம் தேவைப்படுபவர்கள் பனை அபிவிருத்திச் சபையினூடாக அனுமதி பெற்றே பனைமரங்களைத் தறிக்க வேண்டுமெனவும் அவர் அறிவித்துள்ளார்.

1993ஆம் ஆண்டு பனைமரம் தறித்தல் சட்டத்தின் 13வது அத்தியாயத்தின் கீழ் சட்டவிரோதமாக பனைமரம் தறித்தல் தண்டனைக்குரிய குற்றமென அரசவர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (த)

# போதைப்பொருள்பாவனை தடுப்பதற்கு புதிய திட்டம்

### உள்துறை அமைச்சு ஆராய்வு

(கொழும்பு)

போதைப் பொருள் கடத்தல் மற்றும் விற்பனையில் ஈடுபடுபவர்கள் குறித்து புதிய ஒரு அணுகுமுறையைப் பின்பற்றுவது குறித்து உள்துறை அமைச்சு ஆராய்ந்து வருகிறது.

இது போன்றசம்பவங்களில் ஈடுபட்டு குற்றவாளிகளாகக் காணப்படுபவர்களின் புகைப்படங்களை பத்திரிகைகளில் பிரசுரிப்பதன்மூலம்இத்தகைய குற்றங்களை தடுக்க முடியும் எனவும் உள்துறை அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இதேவேளை போதைப் பொருள் ஒழிப்பு வாரம் ஜூன் 24ம் திகதி முதல் 30ம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க- 03)

# 3வது அரசியல் செயலகம் வவுனியா வீரபுரத்தில் திறந்து வைக்கப்பட்டது

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மூன்றாவது அரசியல் செயலகம் வெண்கலச் செட்டிகுள பிரதேச செயலர் பிரிவில் 'வீரபுரம்' வீடமைப்புத் திட்டத்தில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இத்திறப்புவிழாவின்போது மங்கள விளக்கை வவுனியா தெற்கு வலய கல்விப் பணிப்பாளர் திருமதி வீ. ஆர். ஏ ஒஸ்வேல்ட் ஏற்றிவைத்தார். புலிக்கொடியை அரசியல் துறையைச்சேர்ந்த நெடுமாறன் ஏற்றிவைத்தார். பெயர்ப்பலகையை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் திரைநீக்கம்செய்துவைத்தார். அரசியல் பணிமனையைச் செட்டிகுளம் பிரதேச கோட்டக் கல்வி அதிகாரி அருமைநாயகம் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

இவ்வைபத்தில் விடுதலைப் புலிகளின் வவுனியாமாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் டி. மேலவனும் கலந்துகொண்டார். (ம)

## கிராம அபிவிருத்திசங்கங்கள்
# செயற்பாடு இல்லை நிதி யின்மை காரணமாம்

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள் 200க்கு மேற்பட்ட கிராமஅபிவிருத்திச் சங்கங்கள் நிதியின்மை காரணமாக கிராமிய அபிவிருத்தித் திட்டங்களில் ஈடுபடமுடியாத நிலையில் இருப்பதாக கிராமிய மட்டத் தலைவர்களினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் கூட இத்தகைய சங்கங்களுக்கு அரசின் ஆதரவு போதியளவு இல்லாமையினால் கிராமிய அபிவிருத்தித்திட்ட நடவடிக்கைகள் எதுவுமே அமுல் செய்யப்படவில்லை.

இந்தவகையில் கிராமிய மட்டத்தில் அபிவிருத்திப் பணிகளில் அக்கறை கொண்டிருந்த கிராமிய தலைவர்கள் விரக்தியின் விளிம்பில் இருப்பதாகவும் தெரியவந்துள்ளது (க- 77)

# யாழில் முதல் முறையாக மாவட்ட விளையாட்டு

(திருகோணமலை)

வடக்கு கிழக்கு மாகாணத்தின் மாவட்டங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகள் இவ்வாண்டு முதற்தடைவையாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் நடாத்தப்படவுள்ளன.

கிளிநொச்சியில்ஜூன் 8ஆம் 9ஆம் திகதிகளில் ஆண்களுக்கான கிரிக்கெட் பெண்களுக்கான வலைப்பந்தாட்டமும்,

★ மட்டக்களப்பில் ஜூன் 15ஆம், 16ஆம் திகதிகளில் பெண்கள் கிரிக்கெட் மல்யுத்தம், டேபிள் டென்னிஸும்,

★ மன்னாரில் ஜூன் 22ஆம் 23ஆம் திகதிகளில்இரு பாலாருக்குமான கபடி, கரப்பந்தாட்டமும், அம்பாறையில் ஜூன் 29ஆம், 30ஆம் திகதிகளில் இருபாலருக்குமான எல்லே கராட்டியும், யாழ்ப்பாணத்தில் ஜூலை 6ஆம், 7ஆம் திகதிகளில் உதைபந்தாட்டம், கூடைப்பந்தாட்டமும், வவுனியாவில் ஜூலை 20ஆம், 21ஆம் திகதிகளில் மெய்வல்லுநர் போட்டியும், திருகோணமலையில் இருபாலருக்குமான பட்மின்ரன் போட்டியும் இடம்பெறவுள்ளன. (க-03)

# மனிதனிடம் நற்பண்புகள் மிளிர்வதற்கு சமயத்தின் வழிகாட்டல் அவசியமாகும்

## பரிசளிப்பு விழாவில் ஆதீன முதல்வர் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

ஒரு மனிதனுக்கு சமயத்தின் வழிகாட்டல் மிக அவசியமானதாகும். அப்போதுதான் அம்மனிதன் நல்ல குணங்கள் அமையப்பெற்றவனாக சமூகத்தில் திகழமுடியும். எனவே சமூகத்திலுள்ளவர்கள் சமய சிந்தனை வழி ஒழுகுதல் வேண்டும் என நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் நீராவியடியில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெற்ற சைவபரிபாலன சபையினரின் பரிசளிப்பு விழாவில் ஆதீனமுதல்வர் இவ்வாறு தெரிதுள்ளார். சைவப்புலவர் வி. கந்தசாமி தலைமையில் இடம்பெற்ற மேற்படி விழாவில் ஆதீன முதல்வர் தொடர்ந்து உரையாற்றும் போது;

இன்றைய சூழ்நிலைகளில் புறசிந்தனைகளும் செயற்பாடுகளுமே மனிதனை மிதமிஞ்சி ஆக்கிரமித்திருக்கின்றது. ஆகவேதான் மனிதனிடம் பக்தி உணர்வு மழுங்கடிக்கப்பட்டு வருகின்றது.

எனவேதான் இளந்தலைமுறையினரிடம் பக்தியை வளர்க்க வேண்டியது எமது பொறுப்பாகும்.

இன்றைய இளந்தலைமுறையினரே நாளைய குடிமக்களாகும். எனவே இளம் சிறார்களின் பிஞ்சு மனங்களில் சமயக்கல்வியைப் போதிப்பதன் மூலம் அன்பு, அறம், ஒழுக்கம் ஆகியவற்றை வளர்க்க முடியும்.

மதங்கள் பல இருப்பினும் அவை ஒவ்வொன்றும் மனிதனை நல்வழிப்படுத்துவனவாகவே காணப்படுகின்றன.

எந்தவொரு மதமும் எப்பொழுதிலும் தீயவற்றை ஒருபோதும் கூறவில்லை. ஆனால் மதங்களின் பெயரில் பகைமை வளர்வது தவிர்க்கப்பட வேண்டியதே ஆகும்.

இலங்கையைப் பொறுத்தவரை மதக்கல்வியானது பல்கலைக் கழகம் வரை காணப்படுகின்றது. இது எமக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும். எனவே இச்சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி சமயக் கல்வியைக் கற்றுக்கொள்வதன் மூலம் நாம் சமூகத்தில் நல்ல நெறியாளர்களாக வாழ முடியுமென அவர் தெரிவித்துள்ளார். (க-19)

## இன்று நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக இசைத்துறைதலைவர் நா.வி.மு.நவரத்தினத்தின் 'மேலைத்தேச இசையில்' நூல் வெளியீட்டு விழா இன்று மு.ப. 10.00 மணிக்கு பேராசிரியர் சபா.ஜெயராசாதலைமையில் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவின் பிரதம விருந்தினராகயாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும் வாழ்த்துரைகளை பட்டப்படிப்புக்கள் பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ் விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் குமாரவடிவேல்,பேராசிரியர்சிவசாமியும், நூல்வெளியீடும் வெளியீட்டுரையையும் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை நிகழ்த்தவுள்ளார். (க-8)

## சங்கே முழங்கு

### தமிழர் கலையாக்கத்திற்கு மொழித் திறன்போட்டி வழி சமைக்குமா?

ஈழத்தமிழர் கலையாக்கங்களை கலையுலகு வியந்து பாராட்டிய காலமுண்டு. அப் பெருமைகளை மங்கவிடாது காத்து வரவேண்டிய பொறுப்பு இம் மண்ணின் ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் உரியதான கடமையாகும். ஒரு சமூகத்திற்கேயுரியதான கலைவடிவங்களை அதன் விழுமியங்கள், அழகியல்,அளிக்கை முறைமை போன்ற தனித்துவங்கள் கால ஓட்டத்துடன் கரைந்து போகாது பேண வேண்டியது கற்றவர்களினதும் கடமையாகும்.

அந்த வகையில் பாடசாலை மட்டங்களில் தமிழ் மொழித்திறன் போட்டிகள் நடத்தப்படுவது வரவேற்கத்தக்கது. மாணவர்கள் மத்தியில் பல்வகையான எமது மரபுசார் கலைவடிவங்களை அறிமுகப்படுத்தல், வகைத்தூய்மையுடன் அவற்றைக் கட்டிக்காத்தல், அவர்கள் சுய ஆளுமைகளை வளர்த்தல், ஆற்றல்களுக்கு உரமூட்டுதல் போன்றன இப் போட்டிகளை வைப்பதால் ஏற்படக்கூடிய விளைவுகளாகும்.

கல்வித் திணைக்களங்கள் இவ்விளைவுகளை எதிர்பார்த்தாலும் கடந்த சில காலமாக நடைபெற்று வரும் தமிழ் மொழித் திறன் போட்டியில் ஆரோக்கியமற்ற சில சம்பவங்களால் சில பாடசாலைகள் மனத்தாக்கமுற்ற நிகழ்வுகளும் மறுக்கப்படுவதற்கில்லை. பாதிக்கப்பட்ட அவர்களால் வழங்கப்பட்ட, கருத்திற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறைகள்.

★ போட்டிகளுக்கான சுற்றறிக்கைகளில் தவறுகளின்றி ஒவ்வொரு போட்டிகளும் தெளிவான முறையில் அச்சிடப்படல் வேண்டும்.

★ நடுவர்கள் அவ்வத் துறைசார் தேர்ச்சியுடையோரா? என பரிசீலனை செய்து அமர்த்தப்படல் வேண்டும்.

★ பாரபட்சமற்ற நடுவர்களின் உடனடித்தீர்ப்பே இறுதியானது.

இவ்வருடம் தமிழ் மொழித் திறன் போட்டிகளுக்கான களைகட்டல் தொடங்கிவிட்டது. இக்கருத்துக்களை கவனத்திற்கொண்டு நீதி, தர்மம், சமத்துவம் கூறிய தமிழின் பெருமையை சோர விடாது கைகொடுப்போம். நல்ல முறையில் தமிழ் வளர்ப்போம்.

அன்ரனி நிரோஜிகன்

## உடுப்பிட்டி, வல்வை பாடசாலைகளுக்கு அமைச்சர் விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வருகை தர உள்ள பாடசாலை கல்வி அமைச்சர் சுரணிமல ராஜபக்ஷ வல்வை மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி ஆகியவற்றுக்கும் நேரில் விஜயம் செய்ய உள்ளார்.

இரண்டாம் பொதுக் கல்வித்திட்டத்தின் கீழ் உலக வங்கியின் அனுசரணையுடன் நூல்களை ஆதாரமாகக் கொண்டு கற்றல் வள மேம்பாட்டுதிட்டம்குறித்ததிட்டத்தில்இவ் இருகல்லூரிகளும்உள்ளடங்குவதனாலேயே அமைச்சர்இப்பாடசாலைக்கு விஜயம் செய்ய உள்ளதாக அமைச்சருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-19)

## இராசி பலன்

27. 5. 2002
(வைகாசி 13, திங்கள்)
பிரதமை பி.ப. 4.53 வரை
கேட்டை பி.இ 3 21 வரை
ராகுகாலம்-7.22-8.52
நல்ல நேரம்-11.52-1.22
சித்தம்

**மேடம்**
காரிய தடங்கல், எதிரிகள் தொல்லை, உடல் நலக் குறைவு, வேலைக் கஷ்டம்.

**இடபம்**
நண்பர்கள் உதவி, முயற்சி நிறைவேறும், உல்லாசம், பிரயாண நன்மை.

**மிதுனம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி, காரிய அனுகூலம், செய்தொழில் விருத்தி, வீண் கற்பனை.

**கடகம்**
தாழ்ந்த சுபாவம், தொழில் நன்மை, அமைதிக் குறைவு, முயற்சி தாமதம்.

**சிங்கம்**
தொழில் லாபம், மனச்சோர்வு, சிறு வியாதி, காரிய தாமதம்.

**கன்னி**
நினைத்த காரியம் கைகூடும் சகோதரர் உதவி, தனவரவு, பிரயாண சுகம்.

**துலாம்**
பெரியோர் வெறுப்பு, காரிய தாமதம், தனவிரயம், நிலை மாற்றம்.

**விருச்சிகம்**
ஜனவசியம், நல்ல முயற்சி, தெய்வ அனுகூலம், கற்பனை மிகுதி.

**தனுசு**
முயற்சி தாமதம், கோபப்படுதல், ரோக நிலை, திடீர் நன்மை.

**மகரம்**
செய் தொழில் லாபம், காரிய அனுகூலம், கீர்த்தி, உறவினர் கலந்துரையாடல்

**கும்பம்**
நல்ல சம்பவம், பிறர் உதவி முயற்சி கைகூடும், தொழில் முன்னேற்றம்.

**மீனம்**
புதிய திட்டமிடல், முயற்சி தாமதம், சகோதரர் உதவி, உடல் வியாதி.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## சீதனம்..

களின்திருமண வயது உயர்ந்து செல்வதற்கு காரணம் சீதனம் இல்லாதபெண்களும் உயர்ந்த தொழில் புரியும் மணமகனை எதிர்பார்த்தலே ஆகும். தன்னுடன் பிறந்த சகோதரிகளுக்கு திருமணம் செய்து வைப்பது சகோதரர்களின் கடமையாகும். இதற்காக எந்தச் சகோதரனும் கவலை கொள்வது கிடையாது. பெண்கள் எவருக்கும் பாரமாக ஒருபோதும் இருப்பதில்லை, அவர்கள் படித்து சொந்தக் காலில் நின்று உழைக்கத் தொடங்கினால் ஆண்களால் சாதிக்க முடியாத சாதனைகளை அவர்கள் சாதிப்பார்கள், ஒரு குடும்பத்தில் வங்கியில் உயர்ந்த உத்தியோகம் பார்த்த பெண் தன் சகோதரிகளுக்குச் சீதனம் கொடுத்து திருமணம் செய்து வைத்தார். தானும் திருமணம் செய்து சிறப்பாக வாழ்கின்றார்.

சீதனம் கொடுப்பதில் இருக்கும் போட்டி நகர வளர்ச்சிக்கு வழி செய்யும், யாழ்ப்பாணத்தில் எழுந்த பல மாளிகை போன்ற வீடுகள் தனது மகள் சிறப்பாக வாழ வேண்டும் என்பதற்காக கட்டப்பட்ட சீதன வீடுகளாகும். தமிழர்களில் தகுதியற்ற மணமகனுக்கு எந்தப் பெற்றோரும் சீதனம் கொடுத்ததில்லை. மனைவியின் சீதனத்தில் சோம்பேறியாக வாழும் எந்தவொரு குடும்பத் தலைவர்களையும் தமிழ் ஈழத்தில் காணமுடியாது. தொழில்களுக்கு ஏற்றவாறு சீதனம் கொடுப்பது. மிகவும் சரியான முறையாகும். சாதாரண தொழிலாளிக்கு

பெருந்தொகைப் பணத்தையும் வைத்திய அதிகாரி, பொறியியலாளர். கணக்காளர் என் போருக்கு சிறிய பணத் தொகையையும் எந்தமுட்டாளும் கொடுக்க மாட்டான். தமிழ் சமுதாயத்தில் உயர்வு, தாழ்வு என்பது தொழில்களுக் கேற்ப சீதனம் கொடுப்பதால் உருவாகின்றது என்ற கட்டுரையாளரின் கருத்து அவரது அறியாமையைக் காட்டுகின்றது. தமிழர் மத்தியில் இருக்கும் உயர்வு தாழ்வு என்பது, சாதி அடிப்படையில் எழுந்ததாகும். சீதனம் கொடுக்கும் முறையால் எழுந்ததல்ல என்பதை சிறு குழந்தையும் அறியும்.

எயிட்ஸ் நோய், மனநோய், பாலியல் வல்லுறவு என்பவற்றுக்கும் சீதனம் இன்மையே காரணம் என்ற வாதம் ஏற்றுக் கொள்ளத் தக்கதன்று. எயிட்ஸ் நோய் என்பது ஒருவனுக்கு ஒருத்தி என்ற விதி முறை வாழ்வில்இருந்து விலகி வாழ்வதால் உருவாகின்றது. பாலியல் வல்லுறவு மிருகக்குணம் படைத்த மனிதர்களால் உருவாகின்றது. நிறையச் சீதனம் வைத்திருக்கும் ஒருவரின் மகள் மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளாள்மேற்கூறியவற்றிற்கு சீதனம்காரணம் என்று கூறுவது முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் முடிச்சுப் போடுவதற்கு ஒப்பானதாகும்.

வெறும் உடற்கவர்ச்சியில் மயங்கி சீதனம் வாங்காமல் திருமணம் செய்த இளைஞர்களும் யுவதிகளும் படும் கஷ்டம் எழுத்தில் சொல்லமுடியாது. அதேநேரம் சீதனம் வாங்கித்திருமணம் செய்த இளைஞரும் முதுசம் உள்ள ஆணைத்திருமணம் செய்த பெண்களும் மிகவும் செழிப்பாக வாழ்கின்றனர். ஆகவே எமது சமுதாயத்தை சீரழிப்பது சீதனம் அல்ல. செழிப்பாக்குவதே சீதனம்.

## 50 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் அரசடி ஜனசக்தி சன சமூகநிலையத்தின்54 வது ஆண்டு நிறைவு விழாவினை ஒட்டி நேற்றுக்காலை 8.00 மணிக்கு யாழ்.மாவட்ட ரீதியிலான 50 மைல் தூர துவிச்சக்கரவண்டி போட்டி நடைபெற்றது.

இப் போட்டியில் 1வது இடத்தை க. லோகேஸ்வரனும், 2 வது இடத்தை ந.யேசுதனும், 3வதுஇடத்தை தி.நகுலேஸ்வரனும் பெற்றனர்.

1 ஆம் இடத்தினை பெற்ற க.லோகேஸ்வரன் அண்மையில்திருகோணமலையில்நடைபெற்ற மாவட்ட மட்டப் போட்டியில் கலந்து கொண்டு 5 ம் இடத்தினை பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-2)

## அதிபர்கள் இடமாற்றம்

(கோப்பாய்)

நீர்வேலி சீ.சீ.த.க பாடசாலையில் புதிய அதிபராக இலங்கை அதிபர் சேவைதரம் 2-I ஐ சேர்ந்த எஸ். செல்வநாயகம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பாடசாலையில் அதிபராக கடமையாற்றியஇலங்கை அதிபர் சேவைதரம் 2-I ஐச் சேர்ந்த இ.இராசசேகரம் அச்செழு சைவப்பிரகாசவித்தியாலயத்தின் புதிய அதிபராக பதவியேற்றுள்ளார்.

கோப்பாய் கந்தவேள் பாடசாலையின் அதிபராக எஸ்.விவேகானந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்

இதேவேளையில், நீர்வேலி சீ.சீ.த.க. பாடசாலையில் அதிபராக கடமை ஆற்றிய காலத்தில் இப் பாடசாலையில் அபிவிருத்தியில் பல்வேறு வகையிலும் சிறப்பாக பணியாற்றி ஊர்மக்களினது பெரும் பாராட்டைப் பெற்றுக் கொண்டவர் அதிபர் இராசசேகரம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (க79)

## யாழ் நகரில் வெசாக் கூடுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரின் பல இடங்களிலும் பல வர்ண வெசாக் கூடுகள் ஆங்காங்கு கட்டிதொங்க விடப்பட்டன.

வெசாக்தினத்தைமுன்னிட்டு யாழ்.நாகவிகாரையில்விசேட நிகழ்வுகள் பலவும்இடம்பெற்றன.

வழமையைவிட கூடுதலான இராணுவத்தினர், பொலிஸார் சிவில் உடையில் நடமாடியதையும் காணக்கூடியதாக இருந்தது. (க-19)

# இலக்கியவாதியாகவும், எழுத்துலகில் ஒப்பற்ற இலட்சியவாதியாகவும் திகழ்பவர் 'சொக்கன்'

இலங்கையின் தரமான இலக்கியவிமர்சகர்களைவிரல் விட்டு எண்ணினால் அவர்களுள் முதன்மையானவர் கலாநிதி க.சொக்கலிங்கம் (சொக்கன்) ஆவார்.

நவீனதமிழ்இலக்கியவளர்ச்சிக்குக் காத்திரமான பங்களிப்புச் செய்து வருபவரும் தரமான முறையிலும நிதானமாகவும் அடக்கமாகவும் சுருக்கமாகவும் இறுக்கமாகவும் சுவையாகவும் சொல்லும் திறனையுடைய, இவரின்சிறப்பறிந்து யாழ். பல்கலைக் கழகம் கௌரவக்கலாநிதிப் பட்டம் அவருக்கு வழங்கி பெருமை சேர்த்தது.

இலக்கிய வேளாண்மை

ஆழ்ந்த நல்ல சிந்தனைத் திறனும் தரமான எழுத்துப் பணியும் அமைதியானசெயற்பாடுகளும் அடக்கமான பேச்சும்காட்சிக்கு எளியவராகவும் கருத்திற்கு இனியவராகவும் இன்றும்உடல்உளநலத்தோடு உறவாடிக் கொண்டிருக்கும் சொக்கன் அவர்களை தொட்டுத் துலங்காத துறைகளே இல்லையெனலாம். இன்று வரை அறுவடை செய்து கொண்டிருக்கும் ஓர் இலக்கிய வேளாண்மைக்காரர்.

இவருடைய வழிகாட்டலினால்பாலபண்டிதர்கள், பண்டிதர்கள்-சைவப்புலவர்கள் என்ற ஓர் அறிவுச் சமூகம்இந்நாட்டில் திகழ்கின்றது. மூதறிஞர் சொக்கன் தமிழ் உலகுக்கும் சைவ உலகுக்கும் அவர்தமது கவிதையால் கட்டுரையால்- சிறுகதையால்- நாவலால் நாடகத்தால்- பேச்சால் காட்டிய நல்வழிகள் போற்று தற்குரியன. பழமைக்குப்பழமையாய்புதுமைக்குப்புதுமையாய் அவர்வாழ்ந்து காட்டி எம்மையும் வாழ்விற்கும் முறைசிறப்பானது. எழுத்துலகில் ஏறத்தாழ அரை நூற்றாண்டுகாலம் காலத்துக்கேற்ற புதுமையும் பொலிவும் குன்றாமல் எழுதி எல்லோர் உள்ளத்துமர்ந்த உத்தமனாய் வாழ்ந்துவருகின்றார். இதற்கு அவரின் ஆழ்ந்து அகன்ற கல்வியறிவே காரணம் எனலாம்.

பண்பாட்டு மேன்மை

அதுமட்டுமல்ல சமுதாயம் நேசிக்கின்ற சமுதாயத்தை நேசிக்கின்ற கல்விமான் கடமை உணர்விலும் பண்பாட்டிலும் தெய்வநம்பிக்கையிலும் சிறந்து எங் கெங்கெல்லாம் நல்ல கருமங்கள் நடைபெறுகின்றனவோ அங்கெல்லாம் சென்று தமது பங்களிப்பை மனமகிழ்ச்சியுடன் செலுத்தி நிற்பவர், புலமை உயர்வினாலும், பண்பாட்டு மேன்மையினாலும் சமூக உறவினாலும் பலருடைய கவனத்தையும் ஈர்த்துக் கொள்பவர். அவர் பெற்றுள்ள அனுபவங்களும் அந்த அனுபவங்கள் தமிழ் கூறும் நல்லுலகிற்கு வழிகாட்டிய வகைகளும் எம்மவர் நன்றியோடு நினைவு கூரத்தக்கன.

''வீழ் நாள் படா அமை நன்காற்றின் அஃதொருவன் வாழ்நாள் வழிபடைக்கும்கல்' என்றவள்ளுவரின் வாக்கிற்கேற்பத் தமது வாழ் நாள்களை வீழ் நாள்களாக்காது முழுமையிலும் அயராதுபணியாற்றி வரும் சொக்கன் வாழ்நாள் வீழாது முடிவின்றி நீண்டு கொண்டேயிருக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

**நயினை கி.கிருபானந்தா**

## ஒன்று கூடல்

(ஈச்சமோட்டை)

யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினரால் மேற்கொள்ளப்படவுள்ள தென் பகுதிக்கான சுற்றுலா சம்பந்தமான அவசர கலந்துரையாடலொன்று நாளை செவ்வாய் மு.ப.9.30 மணிக்கு மாவட்ட அலுவலகத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த ஒன்று கூடலில் சுற்றுலாசெல்வதற்குபெயர்களை பதிவு செய்த அனைத்து இளைஞர், யுவதிகளையும் தவறாது கலந்துகொள்ளுமாறும்,

புதிதாகப் பெயர்களை பதிவு செய்ய விரும்புபவர்களும் இந்தஒன்று கூடலில் சமுகமளிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது (க-59)

## பொலிஸார் இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பொலிஸார் நேற்று யாழ்.போதனா வைத்திய சாலையில் இரத்த தானம் வழங்கினர்.

வெசாக் தினத்தை முன்னிட்டே பொலிஸார் நேற்று இரத்த தானம் வழங்கினர். (க-19)

## புகைத்தல் தொடர்பாக பாராளுமன்றில் சட்டம் சமர்ப்பிக்கப்படாதது ஏன்? சபையில் பிரஸ்தாபம்

(கொழும்பு)

மதுபானம் அருந்துதல், புகைத்தல தொடர்பான தேசிய கொள்கையை உருவாக்கும் வர்த்தமானி அறிவித்தல வெளியாகியும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கபபடாததன மர்மம் யாது என சுகாதார போஷாக்கு நலன்புரித்துறை அமைச்சில் இடம்பெற்ற மாநாட்டில் பிரஸ்தாபிக்கப் பட்டது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின ஆட்சிக் காலத்தின் போதே இவ்வாறான வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியிருந்தது என்றும் எனினும் இன்றுவரை பாராளுமன்றில் அவ்விவகாரம் கொண்டுவரப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக ஆரம்பம் முதல் தற்போதைய நிலைமை வரையும் ஆராய்ந்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென விசேட குழு ஒன்றை நியமிப்பதாக சுகாதார, போசனை மற்றும் பொதுநல அமைச்சர் பி. தயாரட்ண தெரிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-03)

## தன்னிடமே..

எழுப்ப முடியாதே? என அவன் வினவினான்.

புத்தர் பதில் கூறினார். 'தானாகவே அவள் ஒழுக்கம் கெட்டவளாக 'மாறியிருக்க முடியாது இக்கிராமத்து மக்கள அனைவரும் நல்லவர்களாக இருப்பார்களேயானால் அவள் ஒழுக்கமற்றவளாக மாறியிருக்க முடியாது. இவ்வாறு சொல்லிய புத்தர் அங்கு கூடியிருக்கும் மனிதர்களில் ஆராவது ஒரு வித குற்றங்களும் செய்யவில்லை எனக்கூறினால் அவர்களதுஇல்லத்திற்கு வந்து தாம் உணவு ஏற்றுக் கொளவதாக அறிவித்தார். எந்த ஒரு மனிதனும் முன்வரவில்லை பின்பு புத்தர் கூறினார்.

இக்கிராமத்தில் இத்தனை மக்கள் தீய ஒழுக்கம் கொண்டவராக இருக்கும் போது ஒரு பெண்மணியை மட்டும் நோக்கி தவறானவள் எனச் சுட்டிக்காட்டுவது எங்ஙனம் சரியாக இருக்க முடியும்? உன்னிடமே மலையளவு தீமை இருக்கும் போது மற்றவர் மேல் குற்றம் கண்டு சுட்டு விரலை நீட்டுவது பாவச் செயல். உன்னைத் திருத்து உலகம் தானாகவே திருந்தும் என்றார்.

இவ்விதமான பல தத்துவக் கருத்துக்களை போதனை மூலமாகவும் சாதனை மூலமாகவும் மக்கள் மனதில் பதியச் செய்தவர் புத்தர்.

எமது நாட்டிலும்சிறுச்சிறப்பும், அமைதியும், சமாதானமும் நிலவ வேண்டுமெனில் எமது குண இயல்புகளில் புத்தர் கூறிய நற்போதனைகளைக் கடைப் பிடிக்கவேண்டும்.

## தனியார் பஸ் உரிமையாளர் சங்க வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

(கொழும்பு)

தனியார் பஸ் கட்டணங்களை அதிகரிக்க கோரி தெற்கில் நாளை செவ்வாய்க்கிழமை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் நடத்தத்திட்டமிட்டிருந்த பொதுவேலை நிறுத்தம் இடைநிறுத்தப்பட்டுளளதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ஜெமுனுவிஜரட்ண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

நேற்றுக் காலை போக்குவரதது துறை அமைச்சர் உபாலி பிஜசேகரமாவை சந்தித்து உரையாடியபோதே இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தனியார் பஸ்கள தொடர்பாக தேசிய கொள்கையொன்று உருவாக்கப்படும் என்பதுடன், அக்கொள்கையின்படி தனியார் பஸ் கட்டணங்கள் யாவும் மறுசீரமைப்பு செய்யப்படும் எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

எதிர்வரும் ஜூலை மாதம் முதல் இக்கொள்கை அமுல் செய்யப்படவுள்ளது.

கடந்த வாரத்தில் நீர் கொழும்பு, அம்பலாங்கொடை ஆகிய இடங்களில் நடத்தப்பட்டு வந்த வேலை நிறுத்தமும் கைவிடப்பட்டது தெரிந்ததே. (க-8)

## பாடசாலை கல்வி அமைச்சர் விரைவில் யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

பாடசாலைக் கல்வி அமைச்சர் சுரணிமல ராஜபக்ஷ உட்பட கல்வி அமைச்சின் அதிகாரிகள் ஐவர், உத்தியோகத்தர்கள் ஐவர், மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் கே.சண்முகலிங்கம், மாகாணக் கல்விப் பணிப்பாளர் உட்பட 13 பேர் யாழ்ப்பாணம் வருகை தரவிருக்கின்றனர்.

யாழ்ப்பாணம் வருகை புரியும் அதிகாரிகள் கருத்தரங்குகளை நடத்துவதுடன் பல பாடசாலைகளுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள், கணனிகள் ஆகியவற்றை வழங்குவதுடன் பல பாடசாலைகளில் நூலகங்களையும் திறந்து வைக்கவுள்ளனர்.

இவ்வாறான பொருட்களைப் பெற்றுக் கொள்ளவிருக்கும் 1 AB பாடசாலை அதிபர்கள் கட்டாயமாக அந்தப் பாடசாலை இறப்பர் முத்திரையையும் பொருட்கள் பதிவுப் பத்திரங்கள் நான்கையும் கொண்டுவருமாறுயாழ். கல்வித் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். (க-19)

### ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(மந்திகை)

வடமராட்சிவடக்குபிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நாளை 28 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சகல திணைக்கள அதிகாரிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி கேட்டுள்ளார். (உ-23)

## யாழ். குடாநாட்டில் உலகவங்கியின் உதவியுடன் ஏழு குளங்கள் புனரமைப்பு

(தென்மராட்சி)

வடக்கு-கிழக்கு ஒன்றிணைக்கப்பட்ட விவசாயத்திட்டத்தின் (நியாப்) கீழ் யாழ்ப்பாணக குடாநாட்டில் ஏழு கிராமியக் குளங்களும் மூன்று கடல் அணைகளும் உலக வங்கியின் நிதியுதவியுடன் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் சங்கானையிலுள்ள பொன்னா பெரிய குளம், வேலணையிலுள்ள வேலணை பெரிய குளம், சண்டிலிப்பாயிலுள்ள வேடுவன் கண்டிக்குளம், வரணியிலுள்ளதம்பனைக்குளம், கரவெட்டியிலுள்ள நெதர்கிராங்குளம், பருத்தித்துறையிலுள்ள கவடுகிராங்குளம், கோப்பாயிலுள்ள செம்மணிக்குளமும் அவ்வப்பகுதி விவசாயக்கழகங்களின் அனுசரணையுடன் புனரமைபுச்செய்யப்படும்.

அத்துடன் ஊர்காவற்றுறையிலுள்ள சாம்பல் ஓடை அணைக்கட்டு, குறுக்கடல் மெலிஞ்சிமுனை அணைக்கட்டு மற்றும் வேலணையிலுள்ள சரவணை அணைக்கட்டு ஆகிய மூன்றும் அவ்வப்பகுதியிலுள்ள கிராம அபிவிருத்திச்சங்கங்களின் அனுசரணையுடன் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இவ் இரு புனரமைப்புத்திட்டங்களுக்கும் உலக வங்கி 4.6 மில்லியன் டொலர் நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

அதேவேளை இவ்விருதிட்டங்களிலும் பங்கேற்கவுள்ள மக்களுக்கு சமூக வலுவூட்டல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், இத்திட்டங்கள் மாரிகாலம் ஆரம்பிக்கப்பட முன்னர் பூர்த்தியாக்கப்பட வேண்டும் என நியாப் அலுவலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (க-77)

## வெளிநாடுகளில் உள்ள இலங்கையருக்கு விசா வழங்க புதிய திட்டம்

வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களுக்கு விசா வழங்குவதற்கான புதிய திட்டமொன்றை குடிவரவு குடியகல்வு திணைக்களம் அறிமுகப் படுத்தியுள்ளது.

சட்டவிரோதமான முறையில் வெளிநாடுகளிற்குசென்று வாழ்ந்தவர்கள் பின்னர் அங்கு சட்ட அங்கீகாரம் பெற்றுள்ள இலங்கையர்க்கு விசாவை புதுப்பித்துக் கொள்வதற்கும் இத்திட்டம் உதவுகிறது என குடிவரவு குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளர் மேவின் விஜயரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களின் போது வெளிநாடுகளிலசட்டவிரோதமாக குடியேறி அங்கு சட்ட பூர்வ அங்கீகாரம் பெற்றவர்களுக்கு விசாவை புதுப்பித்துக் கொள்ளமுடியாத நிலை காணப்பட்டு வந்ததும் குறிப்பிடத்தக்கது. (க-8)

## விண்ணப்பம் கோரல்

கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்கள விலங்கு பரிபாலன இரண்டு வருட டிப்ளோமா கற்கை நெறிக்கு 24 ஆம் திகதி வர்த்தமானியில் விண்ணபபம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னராக 'பணிப்பாளர் (மனித வள அபிவிருத்திப் பிரிவு), கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம, த. பெ. இ. 13, கற்றம்பே, பேராதனை என்னும் முகவரிக்கு அனுப்ப வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-03)

### புதிய நிர்வாகிகள்

சாவகச்சேரி லயன்ஸ்கழகத்தின் 2002-2003 காலப்பகுதிக்கான புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவாகியுள்ளனர்.

தலைவர்-லயன் செ.சுப்பிரமணியம் செயலாளர்- லயன் கே.சற்குணதேவன், பொருளாளர்:-லயன் ரீ.முருகதாஸ் பத்திராதிபர்:லயன் எஸ்.சிவபாலசுப்பிரமணியம் புதிய நிர்வாகத்தின் பதவியேற்பு வைபவம் ஜூன் மாத நடுப் பகுதியில் நடைபெறும். (க-77)

மாநகராட்சி யாழ்ப்பாண

## இன்று ஒரு தகவல்

### குருடர் கண்ட யானை

நான்குகுருடர்கள்சேர்ந்து ஒரு யானையைப் பார்க்கப் போனார்கள். அவர்களில் ஒருவன் யானையின் காலைத் தொட்டுப் பார்த்தான், 'யானை தூணைப்போல இருக்கிறது' என்று சொன்னான். மற்றொருவன் துதிக்கையைத் தொட்டுப்பார்த்தான் 'யானை உலக்கையைப் போல இருக்கிறது' என்றான். மூன்றமவன் யானையின் வயிற்றைத் தடவிப் பார்த்தான், 'யானை பெரிய ஜாடியைப் போலிருக்கிறது' என்று சொன்னான், நான்காமவன் அதன் காதைத் தொட்டுப் பார்த்தான், 'யானைமுறத்தைப்போலவே இருக்கிறது' என்றான்.

இவ்விதம் நான்கு குருடர்களும் யானையின் உருவத்தைப் பற்றி விவாதித்தார்கள். விவாதம் பலமாக நடந்தது. அப்போது அந்த வழியாக ஒரு வழிப்போக்கன் வந்தான், 'நீங்கள் ஏன் இப்படிச் சச்சரவு செய்கிறீர்கள்? என்று அவன் அவர்களைக் கேட்டான்.

குருடர்கள் வழிப்போக்கனிடம் தங்கள் விவாதத்தைப் பற்றிச் சொன்னார்கள். தங்களுடைய பிரச்சினையைத் தீர்க்கும்படி கேட்டுக் கொண்டார்கள். வழிப்போக்கன் அவர்களிடம், உங்களில் ஒருவருமே யானையை முழுமையாகப் பார்க்கவில்லை, 'யானை தூணைப்போல இல்லை; அதன் கால்கள்தான் தூண்களைப் போல இருக்கின்றன, அது ஒரு ஜாடியைப்போலவும் இல்லை; அதன் வயிறு மட்டும் தான் ஜாடியைப்போல இருக்கிறது. யானை முறத்தைப் போல இல்லை; அதன் காதுதான் அப்படி இருக்கிறது. யானை உலக்கையைப் போல இல்லை; அதன் துதிக்கையே உலக்கையைப்போல இருக்கிறது. இவை எல்லாமே சேர்ந்த ஓர் உருவம் தான் யானை ஆகும்' என்று சொன்னான் கடவுளுடைய குறிப்பிட்ட ஏதோ ஒருவடிவத்தை மட்டும் பார்ப்பவர்களும் குருடர்களைப்போல இப்படித்தான் சச்சரவு செய்வதில் ஈடுபடுகிறார்கள். ■

நன்றி

ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்ன கதைகள்

# உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன்

# 1451 பில்லியன் ரூபாவாக அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் இன்னும் செலுத்த வேண்டிய கடன் தொகை ஆயிரத்து 451 பில்லியன் ரூபாவாகும்.

1994 ஆம் ஆண்டில் 549 பில்லியனாக இருந்த இத்தொகை 2001 ஆம் ஆண்டில் ஆயிரத்து 451 பில்லியன் ரூபாவாக உயர்ந்துள்ளது.

1994 இல் 249 பில்லியனாகவிருந்த உள்நாட்டுக் கடன் 2001ஆம்ஆண்டில் 816 பில்லியனாகவும்,

1994 இல் 300 பில்லியனாகவிருந்த வெளிநாட்டுக் கடன் 2001 ஆம் ஆண்டில் 635 பில்லியனாகவும் உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, நாட்டின் மொத்த வருமானம் 32 ஆயிரத்து 200 மில்லியனாக விருக்கும் அதேவேளை அரசாங்கம் 32 ஆயிரத்து700 மில்லியன் ரூபாவை முதலீடாகவும் பல்வேறு சேவைகளுக்கும் இவ்வருடம் செலுத்த வேண்டியுள்ளது.

அத்துடன், இன்னும் 32 ஆயிரத்து 900 மில்லியன் ரூபா மேலும் பல சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காகவும் நடை முறைச் செலவினமாகவும் அரசாங்கத்திற்குத் தேவைப்படுகிறது.

இந்நிலையில் அரசாங்கம் ஓய்வூதியர்களுக்கு கடன் பெற்றே ஓய்வூதியம் வழங்க வேண்டியுள்ளது.

அத்துடன், கொள்வனவு செய்யப்பட்ட இராணுவ உபகரணங்களுக்கு 2008 ஆம் ஆண்டுவரை பணம் செலுத்த வேண்டியுள்ளது. (உ)

## மெய்வன்மைப் போட்டிகள்

(வல்வெட்டித்துறை)

கோட்டமட்டத்திலான பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மை போட்டிகள் இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாண கோட்டத்திற்கான மெய்வன்மைப் போட்டிகள் நாளையும், நாளை மறுதினமும்யாழ். மத்திய கல்லூரி மைதானத்திலும்.

நல்லூர் கோட்டத்திற்கான மெய்வன்மைப் போட்டிகள் 30, 31ஆம் திகதிகளில்கொக்குவில்இந்துக்கல்லூரிமைதானத்திலும்,

கோப்பாய் கோட்டத்திற்கான மெய்வன்மைப் போட்டிகள் 3, 4, 5 ஆம் திகதிகளில் அத்தியார் இந்துக்கல்லூரியிலும் இடம்பெறவுள்ளன. (உ-217)

## சமாதானம் பற்றிய நம்பிக்கை குறையவில்லை

### ஹக்கீம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சமாதானம் பற்றிய நம்பிக்கைகள் தேய்வடைந்து போய் விடவில்லை. தற்காலிகமான பின்னடைவுகள் சில ஏற்பட்டுள்ளனவேயன்றி எத்தரப்பாவது பீதியடையும் நிலை இல்லை என்று இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள துறைமுகங்கள் கப்பற் போக்குவரத்து அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸ்தலைவருமான ரவூப் ஹக்கீம் 'தஹிந்து' ஆங்கில நாளிதழுக்குதெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

சமாதானம் முன்னெடுக்கப்படும் போது அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் ஒரு தீர்வை நோக்கி தள்ளப்படுவர். தென்னிலங்கை அரசியலை தக்கபடி கையாளுவது முக்கியமானதாகும். இருகட்சி அணுகுமுறையை முன்னெடுப்பதுடன் பகைமைப் போக்கும் மறக்கப்படவேண்டும்.

கடந்த ஏப்ரலில் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் சந்திப்பை வைத்துக்கொண்டதை தீவிர இடது சாரி கட்சியான மக்கள் விடுதலை முன்னணி கடும் விமர்சனத்திற்கு உள்ளாக்கியது. இதனுள் பொ. ஐ. முன்னணியும் தனது தலையை நுழைத்துக்கொண்டது. ஆனால் புலிகளுடனான சந்திப்பு ஒரு நல்ல ஆரம்பம் எனவும் தெரிவித்துள்ளார். (க)

## தேர்தல் முறைகேடு எம். பி. மீது புகார்

### விசாரணைக்கு பிரதமர் உத்தரவு

(கொழும்பு)

அண்மையில் நடைபெற்று முடிந்த 17 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களின் போது புத்தளத்தில் இடம்பெற்ற சம்பவங்களுக்கு ஐக்கிய தேசிய கட்சி பாராளுமன்ற உறுப்பினர் பாலித்த ரங்கபண்டாரவே பொறுப்பு எனகுற்றம் சாட்டப்பட்டுள்ளது.

புத்தள மாவட்டத்தின் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களை மிரட்டியதுடன், தேர்தல் சம்பந்தமான வன்முறைகளிலும் இவர் ஈடுபட்டுள்ளார் என தெரியவருகிறது.

அத்துடன், தேர்தல்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தனது எதிரிகளையும் இவர் தாக்க முற்பட்டுள்ளார்.

எனவேஇச்சம்பவம்குறித்து பாரபட்சமற்ற விசாரணைகளை நடத்துமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆர். எம். செனிவிரட்ணவுக்கு உத்தரவிட்டிருக்கிறார். (க 08)

## வடக்கு-கிழக்கில் இரண்டாயிரம் ஆங்கில ஆசிரியருக்கு வெற்றிடம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இரண்டாயிரம் ஆங்கில ஆசிரியர்களுக்கு வெற்றிடங்கள் நிலவி வருவதாக கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு, மன்னார், அம்பாறை, வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலுள்ள கஷ்டப் பிரதேச பாடசாலைகளிலேயே இவ் வெற்றிடங்கள் நிலவி வருகின்றன.

இது தொடர்பாக, இலங்கை ஐக்கிய பட்டதாரி ஆசிரியர்கள் அமைப்பின் தலைவர் எஸ். எம்என். அமீர், பொதுச் செயலாளர் எம். எம். விளாம் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில்;

ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் போட்டிப் பரீட்சையின் அடிப்படையிலேயே கல்விச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

இவ்வடிப்படையில் தற்போது ஆங்கில ஆசிரியர்களாக உள்ளோரை நிரந்தரமாக்க வேண்டும் என்றும், நிறைவேற்று உதவிக் கல்விப் பணிப்பாளர்களை இலங்கை கல்வி நிர்வாக சபைக்குள் உள்வாங்கப்படக் கூடாது எனவும் கல்வித்திணைக்களத்திற்கு அவ்வறிக்கைமூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-08)

## சட்டவிரோதமாக மதுவிற்பனை செய்த எண்மர் சிக்கினர்

(மந்திகை)

வலிகாமம் மேற்குப் பகுதியில் விற்பனை அனுமதிப் பத்திரம் இன்றி மதுபானம் விற்பனை செய்துவந்த எட்டுப்பேரை சங்கானை மதுவரித்திணைக்கள அதிகாரிகள் கண்டுபிடித்து அவர்களுக்கெதிராக மல்லாகம நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

மானிப்பாய், சண்டிலிப்பாய், இளவாலை, பெரியவிளான், மாகியப்பிட்டி பகுதிகளைச் சேர்ந்த மேற்படி நபர்களிடம் இருந்து பெருமளவு மதுபானமும் மீட்கப்பட்டுள்ளது. (உ-23)

## யாழ். நகரில் தென்பகுதி பிச்சைக்காரர்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப்பகுதியில் நீண்ட காலங்களின் பின்னர் தென்பகுதிப் பிச்சைக்காரர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

பாடல்களைப் பாடியும், சாகசங்கள் புரிந்தும் மக்களைக் கவர்ந்து பெருமளவு பணம் சம்பாதித்து வருகின்றனர். (உ-7)

## வடமராட்சியில் காய்ச்சல் வேகமாகப் பரவுகிறது

(மந்திகை)

வடமராட்சிப் பகுதியில் மீண்டும் மலேரியாக் காய்ச்சல் நோயின்தாக்கம் அதிகரித்துள்ளது.

தற்போது நிலவுகின்ற கடும் வெப்பம் மற்றும் காற்று காரணமாக இக்காய்ச்சல் வேகமாகத் தொற்றி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளைவன்னி, யாழ்ப்பாணம் இடையேயான நெருக்கமான தொடர்பு காரணமாகவே மலேரியாக் காய்ச்சல் வேகமாகப் பரவி வருவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (உ-23)

## வேள்வி

(மந்திகை)

அல்வாய் திக்கம் பனிக்கர் ஆலயத்தின் வேள்வியும் பொங்கல் உற்சவமும் எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (உ-23)

## அனுமதியின்றி விறகு ஏற்றிச் சென்றவர் கைது

அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் மரங்கள் தறித்து சென்ற விறகுவியாபாரி உழவு இயந்திரத்துடன் கொடிகாமம் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரியிலிருந்து யாழ். நகரப்பகுதியை நோக்கி சென்றுகொண்டிருந்தவேளை கைதடிப்பகுதியில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (உ-23)

## பலாலி இரத்மலானை தனியார் விமான சேவை ஜூன் முதல் இடம்பெறும்

(கொழும்பு)

பலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையிலான பயணிகள் விமான சேவையில் எக்ஸ்போ எவியேஷன், ஈஸ்ட் வெஸ்ட் ஆகிய நிறுவனங்கள் விமான சேவையை நடத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதியளித்துள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதம் முதல் பலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையில் இவ்விரு விமான சேவைகளும் நடை பெறவுள்ளன.

தற்போது உள்ளூர் விமான சேவையில் ஈடுபட்டு வரும் ஹெலிரூட்ஸ் நிறுவனம் இம்மாதத்துடன்தனது சேவையை நிறுத்த முடிவு செய்துள்ளமை தெரிந்ததே.

இதேவேளை, ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனமும் உள்ளூர் விமான சேவையினை நடத்தத் திட்டமிட்டுள்ளதாகத் தெரியவருகிறது (உ-8)

## மாபெரும் வர்த்தகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மீள்குடியேற்ற புனரமைப்பு அதிகார சபையின் அனுசரணையுடன் சீ. டி. சீ. கொன்வன்சன் பிறைவேற லிமிட்டெட் மாபெரும் வர்த்தகக் கண்காட்சியை யாழ். குடாநாட்டில் நடாத்தவிருக்கின்றது.

இந்த மாபெரும் வர்த்தகக் கண்காட்சி அடுத்தமாதம் 21, 22, 23, ஆம் தினங்களில் நடைபெற இருக்கிறது.

மேற்படி கண்காட்சியை வடக்கு - கிழக்கு புனர்வாழ்வமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனா தொடக்கிவைப்பார். (உ-19)

## சிந்தனைக்கு விருந்து

### இடுகுக்கு அலைகின்றார்!

மட்டுவி லிருந்து சாமப்
பொழுதினில் மாட்டு வண்டி
கட்டியே இடுகை ஏற்றிக்
காலையாழ்ப் பாணம் வந்து
தட்டின்றி அவற்றை விற்றுத்
தங்குடும் பத்தைக் காத்த
கட்டையர் கொட்டில் வேயக்
இடுகினுக் கலையக் கண்டோம்.

-பழையவன்

# இந்தியா எப்போதுமேபாகிஸ்தானுக்கு எதிராகப் போர் தொடுக்கமாட்டாது

## சர்வதேச அரசியல் நோக்கர்கள் கருத்து

(புதுடில்லி)

இந்தியா எப்போதுமே பாகிஸ்தானுக்கு எதிராக போர்தொடுக்காது என சர்வதேச அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்தியா-பாகிஸ்தான் எல்லைக் கோட்டுப் பகுதியில் தற்போது ஏற்பட்டுள்ள பதற்ற நிலை தொடர்பாக கருத்து வெளியிடுகையிலேயே அரசியல் நோக்கர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

பாகிஸ்தானை தளமாகக் கொண்டு ,உயர்ந்தபனி மலைகளில் பதுங்கி இருந்து, கொண்டு, இந்திய பொதுமக்கள் மற்றும் பயணிகள் மீது கொடூரமாகத் தாக்குதல் நடத்திவரும் தீவரவாதிகளை ஒழிப்பதே இந்தியாவின் தலையாய நடவடிக்கை.

இப்போரில் பயங்கர வாதம் வாழ்ந்து வரும் நாட்டுக்கோ அல்லது நாட்டுத் தலைவர்களுக்கோ இந்தியா துரோக மிழைப்பதாக நினைத்தால் அது தவறான கூற்றாகும்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் எல்லைவிவகாரம் இருந்தாலும் தற்போது மூண்டுள்ள முறுகல் நிலை காஷ்மீரில் படுகொலை செய்யப்பட்ட 34 பேரின் எதிரொலியே என்றும் தெரிவித்துள்ளனர். (க-7)

# இந்திய-பாகிஸ்தான் முறுகலை தணிக்க பங்களாதேஷ் தயாராம்

(புதுடில்லி)

இந்திய-பாகிஸ்தான்எல்லைகளில் நிலவிலரும் முறுகல் நிலைக்கு எம்மால் இயன்ற உதவிகளை செய்யத்தயாராக உள்ளோம் என்று பங்களாதேஷ் தெரிவித்துள்ளது.

வாஷிங்கடனுக்கு உத்தியோக பூர்வவிஜய மொன்றை மேற் கொண்டுள்ள பங்களாதேஷ் வெளியுறவு அமைச்சர் மொர்ஷத்கான் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவலை சந்தித்த போது இதனைத் தெரிவித்தார்.

இந்திய-பாகிஸ்தான் எல்லை முறுகல்களை பேச்சுக்களின் மூலமேதீர்க்க வேண்டுமென்றும் இரு நாடுகளுக்கு மிடையே நிலவிவரும் அணு ஆயுதபர வலாக்கலை கட்டுப் படுத்துவதன் மூலமே பதற்றத்தை தடுக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார். (க-7)

# மாவோ வாதிகளை ஒடுக்க அவசர காலச்சட்டம் நீடிப்பு

## மன்னருக்கும் கடிதம்

(காத்மண்டு)

நேபாளத்தில் முடியாட்சியை கவிழ்ப்பதற்காக போராடும்மாவோ தீவிரவாதிகளை ஒடுக்குவதற்கு அமுல் படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டத்தை மேலும் 3 மாதங்களுக்கு நீடிக்க காபந்து அமைச்சரவை முடிவு எடுத்துள்ளது.

எனினும் இதற்கான அனுமதியை மன்னரிடம் பெற்றுக் கொள்ள காபந்து அமைச்சரவை கடிதம் ஒன்றை மன்னருக்கு வழங்கவுள்ளது.

கடந்த 6 மாதங்களாக நேபாளத்தில் அமுலிலிருந்த அவசரகாலச் சட்டம் நேற்று நள்ளிரவுடன் முடிவடைந்தநிலையில் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (க-7)

# எயிட்ஸ் நோயைத் தடுக்க ஆயுள்வேத சிகிச்சை

(புதுடில்லி)

எயிட்ஸ் நோயைக் கட்டுப்படுத்தும் ஆயுர்வேத சிகிச்சையினால் முடியும் என்று ஆயுர்வேத நிபுணர்கள் கூறியுள்ளனர்.

இதற்கான மூலிகைகள் ஆயுள்வேதத்தில் இருப்பதாகவும் அதனைப் பயன் படுத்தி உடல் உறுதியை பலப்படுத்தவும் எச்.ஐ.வி. கிருமியை தடுக்கவும் ஆயுள்வேத சிகிச்சையினால் முடியுமெனவும் தெரிவித்துள்ளனர்.

புதுடில்லியில் இடம்பெற்ற எயிட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கின்போதே இப்புதிய தகவலை நிபுணர்கள் தெரிவித்தனர். (க-7)

## காஷ்மீர் முறுகல் நிலையைத் தணிக்க

# இருதரப்பு தலைவர்களும் மொஸ்கோவுக்கு அழைப்பு

இந்திய-பாகிஸ்தான் நாடுகளுக்கிடையேயான பதற்றத்தை தவிர்க்க இரு நாட்டு தலைவர்களும் தலைநகர் மொஸ்கோவில் பேச்சுவார்த்தை நடத்த வருமாறு ரஷ்யாவின் அதிபர் விளாடிமிர் புட்டின் அழைப்பு விடுத்துள்ளார்.

மொஸ்கோவில் நேற்றுமுன் தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இரு நாட்டு எல்லைப்பகுதியிலும் பதற்றம் நிலவி வரும் இவ்வேளையில் பாகிஸ்தான் தனது ஏவுகணைப்பரிசோதனையை நடத்தியது பெரும்கவலையளிக்கின்றது என தெரிவித்தார்.

மேலும் இரு நாடுகளும் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும் என்று தெரிவித்ததோடு பதற்றத்தை தணிக்கும் வகையில் பாகிஸ்தானுக்கு தூதுவர் ஒருவரை அனுப்பவுளளதாகவும் தெரிவித்தார். (க-7)

# வன்முறையில் 2 பேர் பலி

குஜாராத்தில் கோதராவில் வெள்ளிக் கிழமையன்று நடைபெற்ற வன்முறைச்சம்பவங்களில் இரண்டு பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 7 பேர் காயமடைந்துள்ளனர்.

சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு அந்நகரத்தின் பொலிஸ் மற்றும் சிவில் அதிகாரிகளை குஜராத் முதலமைச்சரின் பாதுகாப்பு ஆலோசகர் கே.பி.எஸ்.பில் கருத்து தெரிவித்துள்ளார். (க-7)

# "கௌரி" ஏவுகணை இந்தியாவை அச்சுறுத்தாது

## முஷாரப் தெரிவிப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் ''கௌரி'' ஏவுகணைப் பரிசோதனை இந்தியாவை கலக்கமடைய வைக்கவோ அல்லது இந்தியாவின் எச்சரிக்கைக்காகவோ நடத்தப்படவில்லை என்று பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பாதுகாப்புக்கு இவ்வாறான நடவடிக்கைகள் பரிசோதனைகள் அவசியம் தேவைப்படுகிறது. மேற்படி பரிசோதனை பாகிஸ்தான் இந்திய பதற்ற நிலையில் இடம் பெற்றுள்ளதை அடுத்து இவ்வாறு தவறான முடிவை எடுக்க முடியாது.

மேலும் ''கௌரி'' ஏவுகணை தொடர்பான சர்வதேச நாடுகளின் கண்டன அறிக்கைகளை நிராகரிக்கிறோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதே வேளை தரையில இருந்து தரைக்கு ஏவக் கூடிய ''கௌரி'' வகை ஏவுகணைப் பரிசோதனையை பாகிஸ்தான் நேற்று முன் தினம் நடத்தி அதில் வெற்றியும் கண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (க-7)

# உலக தரிசனம்

## உலக கிண்ண உதைபந்தாட்ட ஒளிபரப்பு

(லண்டன்)

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளை 120 கப்பல்களில் ஒளிபரப்பு செய்ய விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

செய்மதியூடாக ஒளிபரப்பவுள்ள இவ் விசேட நிகழ்வுகளை தென்கொரியாவின் பாரிய கப்பல் நிறுவனமான 'ஹை உன்டான் மேர்ச்சன் மரீன்' என்ற நிறுவனம் மேற்கொள்ளவுள்ளது. (க-7)

## 9 பேர் பலி

(சென்னை)

தமிழ்நாட்டில் இடம்பெற்ற வாகன விபத்து ஒன்றில் 9 பேர் பலியாகியுள்ளதுடன், 5 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

சிவகங்கையில் வானும் லொறியும் ஒன்றுடன் ஒன்று நேருக்கு நேர் மோதியதில் 2 குழந்தை உட்பட 9 பேர் பலியாகியுள்ளனர். (க-7)

## சர்வதேச கண்டனத்தின் மத்தியில்

# அடுத்த ஏவுகணையை பாகிஸ்தான் பரிசீலித்தது

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் தனது இரண்டாவது ஏவுகணைப் பரிசோதனையிலும் வெற்றி பெற்றுள்ளது.

நேற்றுக்காலை ''கஜனவி'' என்ற 790 கிலோ மீற்றர் செல்லக் கூடிய இரண்டாவது குறுந்தூர ஏவுகணைகளை பரிசீலித்த பாகிஸ்தான் தாம் எதிர்பார்த்தது போல் பூரண வெற்றி கிடைத்துள்ளது என தெரிவிக்கிறது.

இதற்கிடையில்நேற்று முன் தினம்'' கௌரி'' ஏவுகணைகளைபரிசீலித்து சர்வதேச ரீதியில் கண்டனங்களைப் பெற்ற போதிலும் நேற்று இவ் ஏவுகணை பரிசீலிக்கப்பட்ட சம்பவமானது அமெரிக்காவுக்கும் கனடாவுக்கும் கிடைத்த இன்னுமொரு அடிஎனஇராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை நேற்று முன் தினம் ஆரம்பமான பாகிஸ்தானின் ஏவுகணைபரிசிலனை முயற்சி தொடர்ச்சியாக இடம் பெறும் என்றும் இதற்கு எவ்வகையான சர்வதேச அழுத்தங்கள் கிடைத்தாலும் பரிசோதனை தொடரும் என பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் முஷாரப் தெரிவித்துள்ளார். (க-7)

# ஜம்முவில் பீரங்கித்தாக்கு ஐவர் பலி; அறுவர் காயம்

(ஸ்ரீநகர்)

ஜம்முகாஷ்மீரில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் நேற்று முன்தினம் திடீரெனபீரங்கித் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளனர். இத்தாக்குதலில் 5 பேர் பலியானதுடன், 6பேர் படுகாயமடைந்துள்ளனர்.

தொடர்ந்து இந்தியா மேற்கொண்டபதில் தாக்குதலில் பாகிஸ்தானியரின் 4 முகாம்கள் அழிக்கப்பட்டுள்ளன.

இதில் படையினர் இறந்திருக்கலாம் என்று தெரியவருகிறது.

தொடர்ந்து நேற்றுகாலை வரை நீடித்த பீரங்கித்தாக்குதலில் ஏற்பட்டஉயிரிழப்புகள் இதுவரை தெரியவரவில்லை. இதேவேளை இந்திய-பாகிஸ்தான் எல்லையில் மோதல்கள் வெடித்த ஒரு வாரத்தில் இதுவே முதலாவது பீரங்கித்தாக்குதல் என்பது குறிப்பிடத்தக்கது. (க-7)

# இந்தியா முழுவதும் பாதுகாப்பு நிலை தீவிரம்

(புதுடில்லி)

இந்திய-பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் இடம்பெற்று வரும் பதற்ற நிலையை தொடர்ந்து இந்தியாவின் சகல பகுதிகளிலும் பலத்த பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் தீவிரவாதிகள் இந்தியாவை எந்தக் கணத்திலும் தாக்கலாம் என்று அவதானிகள் கருத்து வெளியிட்டதைத் தொடர்ந்து இந்திய அரசியல் மையங்கள், மற்றும் அரசியல் பிரமுகர்களின் வாசஸ்தலங்கள் உட்பட பல இடங்கள் பாதுகாப்புக்குட்படுத்தப்பட்டுள்ளது. (க-7)

# மொசாம்பிக்கில் கோர ரயில் விபத்து 205 பேர் ஸ்தலத்தில் பலி;பலர்காயம்

நேற்றுமுன்தினம் மொசாம்பிக்கில் இடம்பெற்ற கோர ரயில் விபத்தில் 205 பேர் ஸ்தலத்தில் பலியானதுடன், மேலும் நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்துள்ளனர்.

மொசாம்பிக்கின் தலைநகரில் இருந்து தென் ஆபிரிக்காவுக்கு செல்லும் வழியில் ஏற்கனவே தடம்புரண்டு விபத்துக்குள்ளான ரயிலுடன் மற்றொரு ரயில்மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் பலியானவர்களின் சடலங்களை அப்புறப் படுத்தும் நடவடிக்கைகள் துரிதகதியில் இடம்பெற்று வருவதாகவும் காயமடைந்தோரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும் பணியில் தொண்டர் அமைப்புகள் பலவும் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ரயில் சாரதியின் கவனக் குறைவே இவ்விபத்திற்கு காரணம் என புலன் விசாரணைத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (க-07)

# இளைஞர் யுவதிகளுக்கு தட்டச்சு பயிற்சி

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர்சேவைகள் மன்ற யாழ். மாவட்ட அலுவலகத்தினால் இளைஞர் யுவதிகளுக்கான தட்டச்சு மற்றும் தையல் பயிற்சிகள் வழங்கப் படவுள்ளன.

ஆறுமாத காலம் நடைபெறவுள்ள தமிழ், ஆங்கில தட்டச்சுப் பயிற்சிநெறிகள் யாழ். மாவட்ட அலுவலக பயிற்சிக் கூடத்திலும், கரவெட்டி, பருத்தித்துறை பிரதேசசம்மேளனப்பயிற்சிநிலையங்களிலும் நடைபெறவுள்ளன.

இப்பயிற்சிநெறியில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் எதிர்வரும் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் மேற்படி அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும்என தெரிவிக்கப்பட்டுள்ளது. (க- 6)

எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச்செயின்.
குறள்

வலம்புரி

## பிரதமரின் பயணம்!

புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து மூன்று மாதங்கள் நிறைவடைந்த கையோடு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா லண்டன் புறப்பட்டுள்ளார். அவரின் லண்டன் பயணம் என்ன நோக்கத்தோடு மேற்கொள்ளப்படுகிறதென்பது வெளியிடப்பட்ட போதிலும் அரசும், விடுதலைப்புலிகளும் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டிய ஓர் சூழ்நிலை ஏற்பட்ட கையோடு பிரதமர் ரணில் லண்டன் சென்றிருப்பது பல்வேறு ஊகங்களுக்கும் நம்பிக்கையீனங்களுக்கும் வழிவகுத்துள்ளது.

அரசும் புலிகளும் தாய்லாந்தில் பேச்சுவார்த்தை மேசையில் சந்திக்க வேண்டுமாயின் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும். இல்லையேல் சமாதானப் பேச்சுவார்த்தை என்ற பேச்சுக்கே இடமில்லை.

நிலைமை அப்படியாக இருக்கும் போது விடுதலைப் புலிகளின் தடையை நீக்காமல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா லண்டன் சென்று அங்கு அந்நாட்டுப் பிரதமர் ரொனி பிளேயரைச் சந்தித்துப் பேசவிருப்பது சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன்மேற்கொள்ளப்படுகிறதா? அல்லது விடுதலைப் புலிகளை ஒடுக்குவதற்கான நடவடிக்கையா என்பது இப்போது எழுந்துள்ள சந்தேகம்.

விடுதலைப் புலிகள் வன்செயல்களைக்கைவிட வேண்டுமென இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர் லின்டா டபீள்ட் மட்டக்களப்பில் தெரிவித்திருக்கும் போது பிரதமர் ரணிலின் லண்டன் பயணம் சந்தேகத்தை ஏற்படுத்துவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

பிரித்தானியாவிடம் அடிமைப்பட்டு கிடந்த இலங்கை இந்தியாவுக்குக் கிடைத்த சுதந்திரத்தின் பயனாக 1948 இல்தானும் சுதந்திரமடைந்தது. எனினும் வழங்கப்பட்ட சுதந்திர நாட்டில் உரிமைகளை வழங்க மறுத்துவிட்டு ஆண்ட இனத்திடம் ஓடிச்சென்று அந்நாட்டு உதவியை பெற்று மீண்டுமொருமுறை தமிழர்களைப் பழிதீர்க்கலாமென அரசு கருதினால் அதைவிடக்கேடு வேறொன்றுமாக இருக்க முடியாது.

# தன்னிடமே மலையளவு தீமை இருக்கும் போது மற்றவர் மேல் குற்றம் காணுதல் பிரிவச் செயல்

வெசாக் தினத்தையொட்டிய கட்டுரை

புத்தரை அவதார புருஷராகக்கருதி மக்கள்வழிபடுகின்றனர். சாக்கிய முனி புத்தர் எதையும் அழிப்பதற்காக அவதாரமெடுக்கவில்லை. மாறாக அவர் நிறைவு செய்வதற்காகவே திருவவதாரம் செய்தார்.

புத்தரை இணையற்ற கர்மயோகியாகவும், மிகவும் தைரியம் வாய்ந்த உலகம். இது வரையில் காணாத, மகத்தான வாழ்க்கை நெறிகளைப் போதித்தவராகவும் நாம் பார்க்கின்றோம்.

கீதையிலே ஸ்ரீ கிருஷ்ணர் கூறிய அறிவுரைக்கு நடைமுறை வடிவம் தருவதற்காகவும், அந்த அறிவுரையின் ஒரு பகுதியையாவது அன்றாட வாழ்க்கையில் நடத்திக் காட்டுவதற்காகவும் ஸ்ரீகிருஷ்ணரே மறுவடிவத்தில் புத்தராக அவதரித்துள்ளார் என்றும் கொள்வர்.

### உன்னத தத்துவம்

புத்தரின் கூரிய அறிவாற்றலும் ஆராய்ச்சி நோக்கும் பகுத்தறியும் மதி நுட்பமும் கருணையும் பரோபகார இதயமும் நமக்கு உயர்ந்த உன்னத தத்துவத்தைத் தரும்.

இளவரசராகப் பிறந்து பிறகு உலகத்தைத் துறந்த புத்தரின் தியாகந்தான் எவ்வளவு உயர்ந்தது. அவர்இந்து மதத்தின் தர்க்க ரீதியான தத்துவங்களைப் பிரப்பிய மாமேதை.

புத்த பகவான் கடவுளையோ ஆன்மாவையோ பற்றிக் கவலைப்படவே இல்லை. அவர் அன்பு, கருணை, பண்பு, ஒழுக்கம், அறநெறி, தியாகம், பொதுநல சேவை ஆகியவற்றிற்கே தனது வாழ்வில் முக்கியத்து வமளித்தார். அவர் பிற உயிர்களுக்காகதமதுஉயிரைத் தியாகம் செய்யத் தயாராகவும் இருந்தார்.

புத்தர் காலத்திலிருந்துதான் விவேகம், வைராக்கியம், நீதி, தியாகம், அன்பு, போன்ற கருத்துக்கள் இந்தியா முழுவதும் நன்றாகப் பிரசாரம் செய்யப்பட்டன. அவர் காலம் முதல் தான் புலனின்பங்களை விடுவது என்பது ஆன்மீக வாழ்க்கையின் மிகவும் உயர்த்த இலட்சியமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

### புத்தரின் போதனை

புத்தர் துறவை மேற்கொண்ட பின் தேசத்தின் பல பகுதிகளுக்கும் பயணம் செய்தார். அவரது தெய்வீக அழகையும் பிரகாசத்தையும் பார்த்து மக்கள் பரவசமடைந்தனர். அவரது அழகினால் கவரப்பட்டு 'அம்பாஷாலி' என்ற பெண்ணொருத்தி அவரை அணுகி,

'மிக உயர்ந்தவராகிய தாங்கள் காவி உடை தரித்து இளவரசன் போலக் காட்சியளிக்கிறீர்கள். இந்த இளம் வயதில் தாங்கள் காவிவஸ்திரம் தரித்ததன் காரணம் அறியலாமா?' என்று வினாவினாள். புத்தர் பதில் கூறினார்.

'மூன்று கேள்விகளுக்கு விடைகாணவே நான் துறவை மேற்கொண்டு காவியுடை தரித்தேன். இப்போது இளமையாகவும் அழகாகவும் இருக்கும் இந்த உடல் நிச்சயம் ஒரு நாள் முதுமையடைந்து, நோயுற்று கடைசியில் அழியத்தான் போகிறது. எனவே இந்த முதுமை, நோய், இறப்பு இவற்றின் காரணத்தை அறிய வேண்டும்' என்றார்.

சத்தியத்தை அறிய விழையும் அவரதுஉயரிய நோக்கத்தினால் கவரப்பட்டு, அவள் அவரைத் தன் வீட்டுக்கு வந்து உணவைஏற்குமாறு அன்புடன் வேண்டிக்கொண்டாள். சிறிது நேரத்திற்குள்ளேயே அக்கிராம மக்கள் ஒவ்வொருவராக வந்து 'அவள் ஒழுக்கம் கெட்டவள்' ஆகவே அவளது அழைப்பை ஏற்க வேண்டாம் எனப்புத்தரிடம் வேண்டிக் கொண்டனர்.

இவற்றைப் பொறுமையுடன் கேட்ட புத்தர் புன்சிரிப்புடன் கிராமத் தலைவனைப் பார்த்து நீயும் அவள் கெட்டவள் என உறுதியாகக் கூறுகிறாயா? எனக் கேட்டார்.

அதற்கு அந்தக்கிராமத் தலைவன் அப்பா ஷாலிஒழுக்கம் கெட்டவள் என என்னால்உறுதியாகச்சொல்லமுடியும். ஆகவேஅவள் இல்லத்திற்குச்செல்லாதீர்கள் என்றான். புத்தர் அவனது வலது கரத்தைப் பிடித்துக் கொண்டு கை தட்டுமாறு கூறினார். யாராலும் ஒரு கையால் ஓசை

(4ம் பக்கம் பார்க்க)

சமூகஜோதி
**கா கணேசதாசன்**

# சீதனம் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவித்து செழிப்பான வாழ்விற்கு அத்திவாரமிடுகிறது

2002-5-1 ந் திகதி வலம்புரி 7 ஆம் பக்கத்தில் வெளிவந்த சீதனம் சம்பந்தப்பட்ட கட்டுரைக்கு மாற்றுரையாக, இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. வாசகர்களின் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. (ஆ - ர்)

தமிழர் வாழ்வில் சீதனம் கொடுக்கும் பழக்கம் இன்று ஏற்பட்டதல்ல, தமிழர் சமுதாயம் தோன்றிய காலம் முதல் சீதனம் கொடுக்கும் பழக்கம் நடைமுறையில் இருந்து வருகின்றது. சீதனத்தை வாங்கித் திருமணம் செய்தவர்களின் வாழ்வையும், சீதனம் வாங்காமல் திருமணம் செய்தவர்களின் வாழ்வையும் ஒப்பிட்டுப் பாருங்கள உண்மை விளங்கும்.

மனித வாழ்வை நிர்ணயிப்பது பணபலமே! அந்தப் பணபலம் இல்லாத மனிதர்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வாழ்வில் எதிர் நீச்சல் போடுகின்றார்கள். சிலர் மட்டும் முன்னேறுகின்றார்கள். அந்தப்பணபலம் திருமணத்தின் மூலம் கிடைக்கும சீதனத்தின் மூலம் பல குடும்பங்களின் ஒளிமயமான வாழ்விற்கு அத்திவாரமிட்டுள்ளது. ஆகவே சீதனம் வாங்கித் திருமணம் செய்வது ஒரு தவறான காரியமல்ல. இதகும் வழக்கம் இல்லையென்றால் எவருக்கும் அளவுக்கு மீறி உழைக்க வேண்டும் என்ற எண்ணம் உருவாகாது. மனிதர்களுக்கு சோம்பேறித்தனம் உருவாகிவிடும்.

ஒரு தாயும், தந்தையும் ஒரு பொறியியலாளரை, ஒரு வைத்தியரை உருவாக்க பல தியாகங்கள் செய்கிறார்கள். அப்படி அவர்கள் செலவு செய்து பல்கலைக் கழகம் அனுப்பி பட்டம் பெற வைத்த மகன் செழிப்பாக வாழ வேண்டும் என்றே விரும்புகின்றார்கள், படிப்புச் செலவிற்கு பட்டகடன் தீர வேண்டும் என்றும் எதிர் பார்க்கிறார்கள். அப்படிப் பட்ட பிள்ளைக்கு சீதனம்

**வி. ப. செல்வநாதன்**
நெல்லியடி

னால் எந்தவித சமூகச் சீரழிவும் உருவாகமாட்டாது. சமூகத்தின் புதிய குடும்பங்களின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் செழிப்பான வாழ்விற்கும் சீதனம் மிகவும் அவசியமானது.

ஒரு தந்தையும் தாயும் தனது பெண்பிள்ளைகள் சிறப்பாக வாழவேண்டும் என்பதற்காக கடுமையாக உழைத்து சேமிக்கின்றார்கள். சீதனம் கொடுக்கும் வழக்கம் இருப்பதால் குடும்பங்களில் சேமிப்பு பழக்கம் உருவாகின்றது. அதுமட்டுமல்ல சகோதரிகள் சிறப்பாக வாழவேண்டும் என்பதற்காக கடுமையாக உழைத்து குடும்பத்தை செழிப்பாக்கும் ஆண் சகோதரர்களையும் உருவாக்குவது சீதனம் கொடுக்கும் வழக்கமே. சீதனம் கொடுக்கும் வாங்கிச் செய்வதால் மட்டுமே அவர்கள் வாழ்வில் செழிப்பு உண்டாகின்றது. அதை விடுத்து சீதனமில்லாத ஒரு குடும்பத்தில் அந்தப் பிள்ளை திருமணம் செய்வானாகில் ஜீவிய காலம் வரை அவன் வறுமையில்வாடுவான், அவனது குடும்பத்தை, பிடித்த வறுமையும நீங்காது.

விரலுக்கு தக்க வீக்கம் வேண்டும். முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படக் கூடாது, ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள பணபலத்திற்கு ஏற்ப மாப்பிள்ளைகளைத் தேட வேண்டும். அப்படிச் செய்தால் பெண்பிள்ளைகளைப் பெற்றுவிட்ட பெற்றோருக்கு எதுவித கவலையும் உருவாகாது. யாழ்ப்பாணத்தில் பல பெண்

(3ம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்

### பெருநெறி

பெருநெறி பிடித்தொழுக வேண்டும்
மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்.

-திருவருட்பா

மாண்பொருளே, எனது முயற்சிகளனைத்தும் உன்னை அடைதற்கான நெறிகளாகுக.

முழு மனதையும் பயன்படுத்தினால் அது நிறைவாழ்வு என்ற பெயர் பெற்று விடுகிறது. மனதின் ஒவ்வொரு சிறுபகுதியும் வேலை செய்யும்போது அது தன்னளவில் ஒரு நெறியாகிறது. ஒரு காலாலே நடந்து போகலாம். இரண்டு காலால் நடப்பது அதிலும் மேலானது. கைவீசி நடப்பது அதிலும் எளிது. உணர்ச்சி, எண்ணம், அறிவு ஆகிய எல்லாப் பகுதிகளும் நாடிய இலட்சியத்தை முன்னிட்டு உழைக்கும் போது அது பெருநெறி என்ற பெயர் பெறுகிறது.

- ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

நல்லூர் ... மாநகராட்சி ... யாழ்ப்பாணம்

# நோர்வே சமாதானக் குழு அமைச்சர் பீரிசுடன் பேச்சு

(கொழும்பு)

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கீசன் அரசுத்தரப்பு பிரதிநிதிகளை நேற்றுச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

தாய்லாந்தில் இடம்பெறவுள்ள பேச்சுக்கள் தொடர்பாக இப்பேச்சுவார்த்தையின்போது ஆராயப்பட்டது.

இப்பேச்சுவார்த்தையில் அமைச்சர்கள் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் மெலிந்த மொறஹொட ஆகியோர் கலந்து கொண்டனர்.

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கீசன் ஜனாதிபதி சந்திரிகாவையும் சந்தித்துப் பேச்சு நடத்துவார் என்று நோர்வேயின் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் தெரிவித்துள்ளார். (வ)

## இலங்கையின்..

விக்கிரமசிங்கா, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன மற்றும் இராணுவ அதிகாரிகளுடன் இலங்கையின் பாதுகாப்புத் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

அதன் ஒரு கட்டமாக அமெரிக்காவின் நாசகாரிக் கப்பல்கள் இரண்டு தடவைகள் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்து போயுள்ளன இந்நிலையில் இந்தப் பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் போது இலங்கையின் துறைமுகங்கள் விமானத்தளங்கள் மற்றும் வான்வெளி ஆகியவற்றை அமெரிக்கா தன்னிச்சையாக உபயோகிப்பதற்குவழி ஏற்பட்டுள்ளது.

இப்பாதுகாப்பு உடன் படிக்கை கைச்சாத்தான பின் இலங்கை அரசுக்குத் தேவையான இராணுவத் தளபாடங்கள், யுத்த தந்திரோபாய வழிகாட்டல்கள் ஆயுதங்களையும் அமெரிக்கா வழங்கவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளுக்கு ஏற்ப வழங்கப்படவுள்ள இராணுவப் பயிற்சிகள் அமெரிக்கப்படையுடன் இணைந்து வழங்கப்படவுள்ளது.

இதேவேளை யூலை மாதம் கைச்சாத்திடப்படவுள்ள இந்த ஒப்பந்தம் தற்போது அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனிலும் கொழும்பிலுள்ள பாதுகாப்பு மற்றும் வெளியுறவு அமைச்சினாலும் தற்போது ஆராயப்பட்டு வருகிறது.

இது இவ்வாறிருக்க அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படவுள்ள நிலையிலும் இடைக்கால நிர்வாக சபையை விடுதலைப்புலிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ள நிலையிலும் இந்த ஒப்பந்தம் இலங்கையின் பாதுகாப்பையும் உறுதித் தன்மையையும் ஏற்படுத்துவதற்றாக செய்யப்பட்டது என்று அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.(வ)

## 6பேர் சுட்டுக்கொலை

கடுவல கொறக்கொத்தப் பகுதியில் நேற்று மாலை பாதாள உலக கோஷ்டியைச் சேர்ந்த 6பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். தனியார் பஸ் ஒன்றில் சென்றுகொண்டிருந்த இவர்களை வான் ஒன்றில் வந்த ஆயுதக குழுவினர் கடத்திச் சென்று சுட்டுக் கொன்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.(த)

## விமானம்...

இயந்திரக்கோளாறு காரணமாக டுபாயில் தரையிறக்கப்பட்ட மேற்படி விமானம் சம்பந்தமான அறிக்கையொன்று தன்னிடம் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்த அதிகார சபைத் தலைவர் லால் லியன ஆராய்ச்சி அது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள விசாரணை அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

விமானம் இயந்திரக்கோளாறு காரணமாக தரையிறக்கப்பட்டதை அடுத்து பிரதமர் மற்றொரு விமானத்தில் தனது பயணத்தை தொடர்ந்தார் என்றும் விமானம் மாறி ஏறும்போது பிரதமருடன் சென்ற அதிகாரிகள பிரயாணப்பைகளை தவறவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(வ)

## அரசுக்கும்..

★இரு சாராரும் சந்திக்கவிருக்கும் தடவைகள்:
★ இரு தரப்பிலும் உள்ள பிரதிநிதிகளின் எண்ணிக்கை:
★சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெறும்போது சட்ட வல்லுநர் குழு அனுமதிக்கப்படுவது:
★ இச் சந்திப்புக்களை அடுத்து அறிக்கை தயாரிக்கப்படுவது அல்லது எட்டப்பட்ட முடிவுகளை மட்டும் எழுத்தில் தயாரிப்பது:
★ இச் சந்திப்புக்கள் குறித்த முடிவுகளை ஊடகங்களுக்கு எப்படி அறிவிப்பது.
★ இச் சந்திப்புக்களை வழிநடத்துபவர் யார்?
★யுத்தநிறுத்த உடன்பாடுகள் குறித்த சிக்கல்கள்.
★இடைக்கால்நிர்வாக சபை குறித்த பேச்சுவார்த்தைக்கும், இனப்பிரச்சினைக்கான நிரந்தரத்தீர்வுக்கும் இடையே மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள்.

ஆகிய விடயங்கள் உள்ளடங்கிய விடயங்கள் இவ்வினாக்கொத்தில் இடம்பெற்றுள்ளன. (வ.5)

## அமெரிக்க..

பாகிஸ்தான், இந்தியா, பிரித்தானியா போன்ற பல நாடுகளும் இதே போன்ற உதவிகளை வழங்கி வருகின்றன என்று கூறினார்.

அமெரிக்கா இராணுவ முகாம் ஒன்றை இலங்கையில் அமைக்குமா? என்று கேட்ட போது இதற்கு பதில் கூறுவது கடினம் என்று தெரிவித்த ஒஸ்ரின் பெர்னாண்டோ நான் அறிந்த வகையில் அப்படி ஒன்றும் இல்லை என்று தெரிவித்தார். (வ)

## சட்டவல்லுநர்..

இச் சட்டநிபுணர்கள் அடங்கிய குழுவினர், அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களுக்கு உதவுவர்.(வ.5)

## மலகூட...

சேட் அணிந்திருக்க காணப்பட்டது. கறுத்த பட்டியும் அணிந்திருக்க காணப்பட்டது. வலையைப் போல பின்னப்பட்ட வெள்ளை நிறத்திலான பெனியன் அணிந்தவாறு எலும்புக்கூடு காணப்படுகிறது.

எலும்புக்கூட்டுடன் காணப்படும் உடுப்புகளை யாழ்.போதனா வைத்திய சாலையில் கடமை நேரத்தில் பார்வையிட முடியும் என யாழ் சட்டவைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.(க)

## படகு...

மதுரையில் த[illegible] நான் எனது ம[illegible] தைகளோடு வன்னிக்குச் செல[illegible]காக இந்தியப் படகு ஒன்றில் வந்து கொண்டிருந்தோம் அப்போது ஆழ் கடலில் கவிழ்ந்த கிடந்த படகு ஒன்றைப் பிடித்தவாறு சில உயிருக்கு போராடிக் கொண்டிருந்தனர் இதனை அடுத்து எமது படகோட்டி அவர்களைக் காப்பாற்றினார்.

இப்படகில் வந்த ஏனைய நால்வரும் காணாமல் போயுள்ளனர் என்று அவர் தெரிவித்துள்ளர். (த.5)

# அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

வடமராட்சி கரணவாய் வடக்கு எள்ளம் குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான கட்டட திருப்பணி நிதிக்காக நேற்று 26.05.2002 யாழ் துரையப்பா விளையாட்டு அரங்கில் அதிஷ்டம் பார்க்கப்பட்ட அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்.

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசு | இல | 50352 |
| இரண்டாம் பரிசு | இல | 26135 |
| மூன்றாம் பரிசு | இல | 38102 |
| ஆறுதல் பரிசு | இல | 42808 |
| ஆறுதல் பரிசு | இல | 26240 |
| ஆறுதல் பரிசு | இல | 35699 |
| ஆறுதல் பரிசு | இல | 34587 |
| ஆறுதல் பரிசு | இல | 25463 |
| ஆறுதல் பரிசு | இல | 16556 |
| ஆறுதல் பரிசு | இல | 07612 |
| ஆறுதல் பரிசு | இல | 19342 |
| ஆறுதல் பரிசு | இல | 31681 |
| ஆறுதல் பரிசு | இல | 23860 |

பரிசளிப்பு வைபவம் 01.06.2002 சனிக்கிழமை பி.ப 3.00 மணியளவில் மேற்படி ஆலய முன்றலில் நடைபெறும் எனவே மேற்படி இலக்கத்திற்குரிய அதிஷ்டசாலிகள் ஆலய திருப்பணிச் சபையினருடன் 31.05.2002 வெள்ளிக்கிழமை முன்பு தொடர்பு கொள்ளவும்.

விக்கினேஸ்வரன்
செயலாளர்

ஆலய திருப்பணிச் சபையினர்

(5352)

# கண்ணீர் அஞ்சலி

யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான

**திரு. அ. விநாயகமூர்த்தி அவர்களின்**

அன்பு மனைவி

**திருமதி தையல்நாயகி விநாயகமூர்த்தி**

அவர்களின் மறைவினால் துயறுரும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றேன்

விக்னேஸ்வரா வீதி,
சங்கானை

**க. மாயாகரன்**

(C/4303)

இசைத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## "மேலைத்தேச இசையியல்"

நூல் வெளியீட்டு விழா

நூலாசிரியர் : நா.வி.மு. நவரத்தினம் *M.Phil. Mus.*
தலைவர், இசைத்துறை

இடம் : கைலாசபதி கலையரங்கு
காலம் : இன்று (27.05.2002) மு. ப. 10 மணி
விழாத்தலைவர் : பேராசிரியர்.சபா. ஜெயராசா
பிரதம விருந்தினர் : பேராசிரியர்.பொன். பாலசுந்தரம்பிள்ளை, துணைவேந்தர்.

### நிகழ்ச்சி நிரல்

1. மங்கள விளக்கேற்றல்
2. இறை வணக்கம்
3. வரவேற்புரை : தலைவர், கவின்கலை மன்றம்
4. தலைமையுரை : பேராசிரியர் சபா. ஜெயராசா
5. வாழ்த்துரை :
   பேராசிரியர். அ. சண்முகதாஸ் (பீடாதிபதி, பட்டப்படிப்புகள் பீடம்)
   பேராசிரியர். R. குமாரவடிவேல் (பீடாதிபதி, விஞ்ஞானபீடம்)
   பேராசிரியர். வி.சிவசாமி.
6. நூல் வெளியீடு
   வெளியிட்டு வைப்பவர்.
   பேராசிரியர். பொன்.பாலசுந்தரம்பிள்ளை (துணைவேந்தர்)
7. வெளியீட்டுரையும், பிரதம விருந்தினர் உரையும்,
   பேராசிரியர். பொன். பாலசுந்தரம்பிள்ளை. (துணைவேந்தர்)
8. நூல் ஆய்வுரை,
   பேராசிரியர். ப. கோபாலகிருஷ்ண ஐயர், (கலைப்பீடாதிபதி)
9. நூலாசிரியர் பதிலுரை.
10. நன்றி உரை- செயலாளர் கவின்கலை மன்றம்.

இறைவணக்கம்.
இசை ஆர்வலர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

விழாக்குழு,
கவின்கலை மன்றம்,
இராமநாதன் நுண்கலைக்கழகம்,
யாழ். பல்கலைக்கழகம்,
23. 05. 2002

(C/4305)

**வாழ்த்துபவர்: காரைநகர் அன்பர்**

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தையல்நாயகி விநாயகமூர்த்தி

கொக்குவில் கிழக்கை பிறப்பிடமாகவும் கொழும்பில் வசித்தவருமான திருமதி தையல்நாயகி விநாயகமூர்த்தி அவர்கள் 24.05.2002 அன்று கொழும்பில் காலமானார். அன்னார் சட்டத்தரணியும் யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினருமாகிய அப்பாத்துரை விநாயகமூர்த்தி அவர்களின் அன்பு மனைவியும், சிவபாக்கியம் (கொக்குவில்), காலம் சென்ற நடராசா, பராசக்தி (கொக்குவில்), இளைப்பாறிய அரச நில அளவையாளர் இராசேந்திரன் (வரணி), ஆகியோரின் அன்புச் சகோதரியும், இளைப்பாறிய இலிகிதர் விஸ்வநாதன் (கொக்குவில்), இந்திராதேவி, கங்காதரன், சுந்தரேஸ்வரி, நடராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் ஜெயரத்தின மலர்சாலையில் இருந்து ஈமக்கிரியையின் பின் எடுத்துச் செல்லப்பட்டு பொரளை கனத்தை இந்து மயானத்திற்கு 27.05.2002 திங்கட்கிழமை மதியம் 12 மணிக்கு தகனம் செய்யப்படும்.

பூதவுடல் 27.05.2002 காலை 7 மணிவரை 270/4 திம்பிலி வீதி கொழும்பு-05ல் இருந்து ஜெயரத்தின மலர்சாலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

T.P 590453 / 559041

(C/4304)

## சுந்தரம் சுந்தரலிங்கம்
## (ஓவசியர்)

(இளைப்பாறிய மின்சார சபை ஊழியர், கொக்குவில் கிராம சபை, நல்லூர் பிரதேச சபை)

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த சுந்தரம் சுந்தரலிங்கம் (ஓவசியர்) நேற்று சிவபதமடைந்துவிட்டார் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறேன்.

தகவல்
மனைவி

(C/4306)


மில்க்வைற்




25 மொடேன் மில்க்வைற் மேலுறைகளை சேகரித்து ஓர் அப்பியாசக் கொப்பியை பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற் சோப் இன்டஸ்றியல்ஸ
527, காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 3541




லாலா
சோப்
சண்சயின்
சோப்
எமது வன்னி மண்ணிலும் மீண்டும் விற்பனைக்கு வரவிருக்கின்றது.
லாலா அச்சுவேலி


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.05.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.